விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 25 செவ்வாய்க்கிழமை (07.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# குற்றச்செயல்களை ஒடுக்க

# நேரில் வருகிறார் பூஜித

## யாழில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்



(யாழ்ப்பாணம்)

யாழில் அதிகரித்துள்ள சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் திட்டங்களை நெறிப்படுத்த நேரடியாக வருகை தரவுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழில் மூன்று தினங்கள் தங்கியிருந்து தனது நடவடிக்கையை தொடரவுள்ளார் என சட்டம் ஒழுங்குதுறை அமைச்சர் சாலக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மூன்று முக்கிய விடயங்களை வலியுறுத்தி இன்றைய தினம் பாரிய கவனயீர்ப்பு போராட்டமும் கையெழுத்து வேட்டையும் இடம்பெறவுள்ளது.

இவ் கவனயீர்ப்பு போராட்டமானது சோசலிஸ கட்சி மற்றும் மக்கள்

24ஆம் பக்கம் பார்க்க....

## அவசரமாக கூடியது பாதுகாப்புச் சபை

(கொழும்பு)

சாலாவ படைமுகாம் ஆயுதக் கிடங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட பாரிய வெடிப்புச் சம்பவம் தொடர்பில் தேசிய பாதுகாப்புச் சபை நேற்று திங்கட்கிழமை அவசரமாகக் கூடி ஆராய்ந்துள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள இலங்கையின் படைத்துறைச்

24ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி – ரணில் அவசர ஆலோசனை

(கொழும்பு)

கொழும்புக்குக் கிழக்காக 36 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாலாவ படைமுகாமின் ஆயுதக் கிடங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்துத் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க....

## கைதான பசில் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

கறுப்புப் பண குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இலங்கையின் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பிணையின் கீழ்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுதக் கிடங்கை இடமாற்ற திட்டம்

(கொழும்பு)

கொஸ்கமவிலுள்ள சலாவ இராணுவ முகாம் ஆயுதக் கிடங்கை தன்னுடைய ஆட்சி காலத்தின் போது அப்பகுதியிலிருந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரிட்டன் இராஜதந்திரிகள் நேற்று இலங்கைக்கு விஜயம்





(கொழும்பு)

பிரித்தானியாவின் இரண்டு சிரேஷ்ட இராஜதந்திரிகள் நேற்று திங்கட்கிழமை காலை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகத்தின் நிரந்தர வதிவிட துணைச் செயலாளர் சைமன் மெக்டொனால்ட் மற்றும் பிரித்

24ஆம் பக்கம் பார்க்க....

## அலாவுதீன் குத்திக் கொலை; மனைவி ரூபியாவுக்கு தூக்கு

### விசேட பணிப்புரையில் இளஞ்செழியன் தீர்ப்பு

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டு கல்முனை மாளிகைக்காட்டில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தின் முதலாவது எதிரிக்கு யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், பிரதம நீதியரசரின் விசேட பணிப்புரையின் கீழ் கல்முனை மேல்நீதிமன்றில் இந்தக் கொலை வழக்கின் தீர்ப்பினை நேற்று வழங்கியமை விசேட அம்சமாகும்.

குறிக்கப்பட்ட வழக்கில் இறந்துபோன சின்னலெப்பை அலாவுதீனை கத்தியால் குத்தி கொலை செய்ததாக முதலாவது எதிரியான அவரது மனைவி கலந்தர் ரூபியாவை குற்றவாளி என தீர்ப்பளித்து நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

எனினும் இதில் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாவது எதிரியான செல்லத்துரைக்கு எதிராக குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சின்னலெப்பை அலாவுதீன் இறந்தபோது

24ஆம் பக்கம் பார்க்க....

## வெடித்துச் சிதறியது ஆயுதக் கிடங்கு

## சாலவ முகாமை சூற்றியுள்ள பகுதிகள் போர் அழிவுப் பிரதேசமாக காட்சி!

(கொழும்பு)

போரின் காட்சிகளை நினைவுபடுத்தும் வகையில், இலங்கை இராணுவத்தின் சாலவா முகாமை சுற்றியுள்ள பிரதேசம் அழிவுப் பிரதேசமாக காட்சியளிப்பதாக சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற ஊடகவியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த வெடி விபத்தினால் சாலாவ படைமுகாமும், ஆயுதக் களஞ்சியமும் முற்றாக அழிந்து, உருத்தெரியாமல் சிதைந்து கிடப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனிடையே, சாலாவ முகாம் ஆயுதக் கிடங்

23ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகளிடையே கைகலப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் நேற்றைய தினம் இரவு கைதிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் கைதி ஒருவர் தலையில் படுகாயம் அடைந்ததுடன் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையில் உள்ள கைதிகளில்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.வாள்வெட்டுச் சம்பவம்

## 3 சந்தேக நபர்களுக்கு பொலிஸார் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் சமூக விரோத செயல்கள் மற்றும் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட பிரதான சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்ட கேவா. சன்னா. பிரகாஸ் ஆகியோர் தொடர்பாக தகவலறிந்தால் உடனடியாக தம்மை தொடர்பு கொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக

24ஆம் பக்கம் பார்க்க....

## வட - கிழ. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துதல்

### நிதியுதவி வழங்குமாறு திறனாளிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்குரிய நிதியுதவியினை செய்யுமாறு தமிழ் மாற்றுத்திறனாளிகளின் அமைப்

24ஆம் பக்கம் பார்க்க....




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 5 பஸ்கள் மீது கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு 05 பஸ்கள் மீது இனந் தெரியாத நபர்களால் கல்வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் 4 பஸ்கள் மற்றும் தனியார் பஸ் ஆகியவற்றின் மீது மறைந்திருந்து இந்தக் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதலினால் பஸ் கண்ணாடிகள் பலத்த சேதமடைந்தன. முன்னதாக நாவற்குழிப் பகுதியில் வைத்து தனியார் பஸ் மீதும், சங்கத்தானை, மட்டுவில், யாழ்.முத்திரைச் சந்தி மற்றும் மிருசுவில் ஆகிய பகுதிகளில் வைத்து இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வெண்ணப்புவ மற்றும் கம்பஹா ஆகிய போக்குவரத்துச் சாலைகளுக்குச் சொந்தமான பஸ்கள் மீதே இவ்வாறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ் டிப்போவிற்கு முன்பாக, இலங்கை அரச போக்குவரத்து பணியாளர்கள் மற்றும் தனியார் பேருந்து பணியாளர்களிற்கு இடையில் நடைபெற்ற மோதல்களில் சாரதி யொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# திறப்புவிழா

அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியம் மண்டப திறப்பு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக் கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (செ)

## குழப்பம் விளைவித்த இருவருக்கு அபராதம்

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த இருவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இருவரை கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது சந்தேக நபர்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு நீதிபதி அபராதம் விதித்துள்ளார். (செ-60)

# தேசிய போசாக்கு மாத பிரகடனம்; ஜனாதிபதி தலைமையில் வைபவம்

(கொழும்பு)

இலங்கை வாழ் மக்களின் போசாக்கு நிலைமையை உயர்த்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் தேசிய போசாக்கு மாதத்தைப் பிரகடனப்படுத்தும் தேசிய வைபவம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் தலைமையில் நேற்று பிற்பகல் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

போட்டித் தன்மை வாய்ந்த சமூகத்தில் போசாக்குள்ள உணவுப் பழக்க வழக்கங்களிலிருந்து மக்கள் தற்போது விலகிச் செல்கின்றனர். மக்கள் விரைவு உணவு மற்றும் பானங்கள் மீது ஆர்வம் காட்டுவது வேகமாக இடம்பெறுகின்றது. விசேடமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் விரைவு உணவு மற்றும் பானங்கள் மீது ஆர்வம் காட்டும் ஒரு போக்கு காணப்படுகிறது.

கடந்த இரண்டு தசாப்தங்களில் மக்களது உடலின் எடை மற்றும் பருமன் வேகமாக உயர்வடைந்து செல்வதை அவதானிக்க முடிவதுடன் தொற்றா நோய்களுக்கு ஆளாகும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டுகின்றது.

ஆகவே சரியான போசனையைப் பெற்றுக்கொள்வதற்காக பல்வகைமையுடைய உணவு வகைகளைத் தெரிவு செய்தல், உணவின் தரம் பாதுகாக்கப்படக் கூடியவாறு உணவு சமைத்தல் பற்றி போசாக்கு மாதத்தினூடாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவுத் தட்டு ஒன்றில் உள்ளடங்கியிருக்க வேண்டிய உணவுகளின் சரியான அளவுகள் மற்றும் உணவுப் பல்வகைமை என்பனபற்றி மக்களுக்கு அறிவூட்டுவதே இம்முறை முன்னெடுக்கப்படும் தேசிய போசாக்கு மாதத்தின் நோக்கமாகும்.

தேசிய போசாக்கு மாதத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், அரச மற்றும் தனியார் துறையினரை ஒருங்கிணைத்து போசாக்கு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல், பாதயாத்திரைகளை ஏற்பாடு செய்தல், பாடசாலை மாணவர்களிடையே சுவரொ ட்டிப் போட்டியினை நடத்துதல், மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களை உள்ளடக்கி பல்வேறு போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இதில் உள்ளடங்கும்.

தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு மலர் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்கிரம, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித்த மஹீ பால உள்ளிட்ட பலர்இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.(செ-12)

# பல கொள்ளைகளுடன் தொடர்புடைய சூத்திரதாரி நீதிமன்றில் சரணடைவு

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பங்களின் சூத்திரதாரி என பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சீக்கியன் என்பவன் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று சரணடைந்துள்ள நிலையில் அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, சுன்னாகம், தெல்லிப்பழை, அச்சுவேலி, மானிப்பாய் பகுதிகளில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த நால்வர் ஏற்கெனவே சுன்னாகம் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் சீக்கியன் என அழைக்கப்படும் வேம்படி துன்னாலையைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே தமது தலைவன் என அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

அவரைக் கைது செய்வதற்கு பல தடவைகள் நெல்லியடிப் பொலிஸார் முயன்றபோதிலும் அவர் தலைமறைவாக யாழ்ப்பாணப் பகுதியில் இடம்மாறிமாறி வசித்து வந்தார்.

இவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு ஒன்றில் ஏற்கெனவே பிணை வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து வழக்கிற்கு அவர் சமுகமளிக்காமையால் பருத்தித்துறை நீதிமன்றினால் பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தலைமறைவாக இருந்த அவரை பொலிஸார் கைது செய்யமுடியாத நிலையில் பிணையாளிகளிடம் அவரை ஒப்படைக்குமாறு பொலிஸார் கூறியிருந்தனர்.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை சட்டத்தரணி ஒருவர் மூலமாக பருத்தித்துறை நீதிமன்றில் அவர் சரணடைந்தார். அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (செ-60)

# ரவிக்கு எதிரான பிரேரணை; த.தே.கூட்டமைப்பு இன்று முடிபு

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதா அல்லது எதிர்த்து வாக்களிப்பதா என்பது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்று முடிவெடுக்கும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டம் இன்று காலை நாடாளுமன்ற கட்டத் தொகுதியில் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்பின்னரே இந்த விடயம் தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நிதி அமைச்சருக்கு எதிராக பொது எதிரணி என தம்மை கூறிக்கொள்ளும் மகிந்த ஆதரவு உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீது நாளை 8 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (செ-12)

# கரையொதுங்கிய சடலம்

நெடுந்தீவு கடற்கரையில் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்த நிலையிலுள்ள ஆணின் சடலம் நேற்று திங்கட் கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

மேலும் இது இந்திய அல்லது இலங்கை மீனவராக இருக்க முடியும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி சடலத்தினை பார்வையிட்ட பின்னர், அதனை, யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருவதாக நெடுந்தீவு பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.(செ-11)


## வேலையாள் தேவை

எமது இலத்திரனியல் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள் தேவை.
கணணி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயது 18 - 25 வரை.
ஆண்கள் மட்டும். ஆரம்ப மாத வேதனமாக ரூபா. 14000 வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
இல. 11.A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
**021 222 3857**
(4876)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தின் பின்வரும் கால்நடைகள் 15.06.2016 புதன்கிழமையன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஆடுகள்:-**

| இல | இனம் | பால் | வயது |
|---|---|---|---|
| 01 | ஜமுனாபாரி கலப்பு | ஆண் | 04 - 05 வருடங்கள் |
| 02 | ஜமுனாபாரி கலப்பு | ஆண் | 02 - 03 வருடங்கள் |
| 03 | ஜமுனாபாரி கலப்பு | ஆண் | 18 - 24 மாதங்கள் |
| 04 | உள்ளூர் | ஆண் | 12 - 18 மாதங்கள் |
| 05 | ஜமுனாபாரி கலப்பு | பெண் | 03 - 04 வருடங்கள் |
| 06 | ஜமுனாபாரி கலப்பு | பெண் | 04 - 05 வருடங்கள் |
| 07 | உள்ளூர் | பெண் | 18 - 24 மாதங்கள் |

**மாடுகள்:-**

| இல | இனம் | பால் | வயது |
|---|---|---|---|
| 01 | ஜெர்சி கலப்பு | பெண் | 05 வருடங்கள் |
| 02 | ஜெர்சி கலப்பு | ஆண் | 05 வருடங்கள் |
| 03 | ஜெர்சி கலப்பு | ஆண் | 05 வருடங்கள் |
| 04 | ஜெர்சி கலப்பு | ஆண் | 05 வருடங்கள் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 13.06.2016 திங்கட்கிழமையன்று காலை 10.00 தொடக்கம் 11.00 வரை ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம்.

**ஏலவிற்பனையானது 15.06.2016 புதன்கிழமை காலை 10.00** ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-4821)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15 02 1942

**இராசேந்திரம் ஜெயச்சந்திரா**

இறப்பு 19 05 2015

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
தந்தையே உங்கள் அன்புமுகம்
எங்கள் நினைவுகளில்
நின்று மறையவில்லை.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடமாகியும்
உங்கள் நினைவுத் துயரிலிருந்து மீண்டெழ முடியவில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"அன்பு இல்லம்"
ஓடை ஒழுங்கை
சவனாய் புலோலி வடக்கு.
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்

(C4822)



# பசில் மீண்டும் கைது மகிந்த சிறைக்குள் நாமலிடம் விசாரணை



(கொழும்பு)

காணி மோசடி தொடர்பான குற்றச்சாட்டில். முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்திலுள்ள காணி தொடர்பான விசாரணைக்காக. பசில். நேற்று காலை நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த விசாரணைகளையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில். பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு. இரண்டு மாதங்களின் பின்னர் கடுவலை நீதவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் படுகொலை தொடர்பில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்கவின் நலம் விசாரிக்க முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.



வசீம் தாஜுடீனின் படுகொலை தொடர்பான சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரிலேயே அநுர சேனாநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜ க்ஷ பாரிய நிதி மோசடி குற்றப்புலனாய்வுப்பிரிவில் நேற்று ஆஜராகியுள்ளார்.

தெஹிவளை மிஹிந்து மாவத்தையில் காணப்படும் சொத்து ஒன்று தொடர்பில் வாக்குமூலம் அளிக்கவே பாரிய நிதி மோசடி குற்றப்புனலாய்வு பிரிவிற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த சொத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷவிற்கு சொந்தமானது.

இது குறித்து ஏற்கனவே சிராந்தி ராஜபக்ஷ மற்றும் யோசித ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நிதி அமைச்சருக்கு எதிராக வாக்களிக்க ஜே.வி.பி.முடிபு

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களினால் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அடங்கும் சில காரணிகளுக்கு மாத்திரம் தமது கட்சி ஆதரவு வழங்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை 8ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

அதேவேளை அன்றைய தினம். ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இராணுவ முகாமில் பரவிய தீயினால் சுவாசக் கோளாறுகள் ஏற்படும் அபாயம்

சாலவ இராணுவ முகாமில் பரவிய தீயினால் ஏற்பட்ட புகையை சுவாசிப்பவர்களுக்கு சுவாசக் கோளாறுகள் ஏற்படும் அபாயமுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சாலவ இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டாலும். இந்த பகுதியில் புகை மூட்டம் தொடர்ந்தும் நிலவுகின்றது.

குறித்த பகுதியில் காணப்படும் புகையை சுவாசிப்பவர்களுக்கு ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறு ஏற்படக் கூடும் என சூழல் நலன்கள் , உடல்நலன் மற்றும் உணவு பராமரிப்பு தொடர்பான பிரதி பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை. தீ பரவிய பகுதிகளில் மூடாத கிணறுகள் காணப்படுமாயின் அவற்றினை துப்புரவு செய்த பின்னரே பயன்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஜனநாயகக்கட்சி இனி ஐ.தே.கவுடன்

### பொன்சேகா அறிவிப்பு

(கொழும்பு)

தமது கட்சி எதிர்வரும் காலங்களில் ஐ.தே.க. உடன் இணைந்து செயற்படும் என ஜனநாயகக்கட்சியின் தலைவர் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர். மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கத் தேரர்களை சந்தித்து நல்லாசி பெற்ற பின் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-10)

## வீதி தாழிறங்கியதால் பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம்

கினிகத்தேன - பொல்பிட்டிய பிரதேசத்தின் வீதி தாழிறங்கியுள்ளதால் அங்கிருந்த 28 குடும்பங்கள் நேற்று பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொல்பிட்டிய ரோட்லேண்ட் நீர் மின்சார திட்டத்தின் கீழான சுரங்கப் பாதையே கீழிறங்கியுள்ளதால் குறித்த பகுதிகளில் வசித்த 28 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பொல்பிட்டிய பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த சுரங்கப் பாதையுடனான மின் கொண்டு செல்லும் வேலைத் திட்டமானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நண்பகல் பலாங்கொடை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடை செய்யப்பட்ட 6 மாணவர்களை விசாரணைக்காக பலாங்கொடை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாணவர் சங்கத்தின்தலைவர் சமீர கப்புவத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை. முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதிக்கு குறித்த 6 மாணவர்களும் மிரட்டல் விடுத்தமை தொடர்பிலேயே இவர்களுக்கான வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சிறுமிகளைச் சித்திரவதைக்குட்படுத்திய சிறிய தந்தைக்கு 15ம் திகதிவரை மறியல்

சிறுமிகள் இருவர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேக நபரான அச்சிறுமிகளின் சிறிய தந்தையை 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். தியாகேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

தமக்கு தமது சிறிய தந்தையும் சித்திரவதை செய்ததாக சிறுமிகள் அளித்த வாக்கு மூலத்தின் படி ஏறாவூர் பொலிஸார் மேற்படி சந்தேக நபரை (வயது 32) கைது செய்து ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். தியாகேஸ்வரன் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோது இந்த விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-10)

## இலங்கை போக்குவரத்து சபையில் 8 ஆயிரம் பேர் ஓய்வுபெற வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையில் பணிபுரியும் 8 ஆயிரம் பேர் ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓய்வானது குறித்த பணியாளர்களின் சுயவிருப்புடனே நடைபெறுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரியந்த தனசிறி பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை போக்குவரத்து சபையின் மறு ஒழுங்கமைப்பு திட்டத்தின் கீழ் இது நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது விருப்பின் பேரில் ஓய்வு பெற்று செல்லும் பணியாளர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையினால் இழப்பீட்டு பணம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைவான சுற்று நிருபம் ஒன்று போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த சுற்று நிருபத்தின் படி தன்னார்வ பணியாளர்களும். பேருந்து சாரதிகள். நடத்துநர்கள். பொறியிலாளர்களும் ஓய்வு பெறும் பணியாளர் வரிசையில் உள்ளடக்கப்படவில்லை என்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் குறித்த ஓய்வுக்கான விண்ணப்பங்களை இந்த மாதம் 30 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மூன்று கோடி கொள்ளை ஐவர் கைது

(கொழும்பு)

சுமார் மூன்று கோடியே 10 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டட மூலப்பொருட்கள் மற்றும் உள்நாட்டு புகைத்தல் பொருட்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தியொன்றை கொள்ளையிட்ட 5 பேரை குளியாப்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## பலியான இராணுவ வீரருக்கு டுவிட்டரில் ஜனாதிபதி இரங்கல்!

(கொழும்பு)

கொஸ்கம- சாலவ இராணுவ முகாமில் இடம்பெற்ற தீ விபத்தில் பலியான இராணுவ வீரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இரங்கல் வெளியிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் வலைத் தளத்தில் ஜனாதிபதி இந்த இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் பாதுகாப்புக்கு தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை. வெடிப்பு ஏற்பட்ட அவிசாவளை கொஸ்கம சாலவ இராணுவ முகாமை சுற்றியுள்ள பகுதிகளை பார்வையிடுவதற்காக வருவதைத் தவிர்த்து கொள்ளுமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கோபா அமெரிக்கா கால்பந்து

கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் நேற்று நடந்த போட்டியில் மெக்சிக்கோ-உருகுவே அணிகள் மோதின. இதில் மெக்சிக்கோ 3-1 என்ற கோல் கணக்கில் பலம் வாய்ந்த உருகுவேயை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது.




உலக கோப்பை, ஐரோப்பிய கோப்பை ஆகியவற்றுக்கு அடுத்த பிரபலமான கால்பந்து ஆட்டம் கோபா அமெரிக்க போட்டியாகும்.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கும் 45-வது கோபா அமெரிக்க கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதன் தொடக்க ஆட்டத்தில் கொலம்பியா 2-0 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை ('ஏ' பிரிவு) வீழ்த்தியது.

அதை தொடர்ந்து நடைபெற்ற கொஸ்ட ரிக்கா -பராகுவே ('ஏ' பிரிவு), பிரேசில்-ஈக்வடார் ('பி' பிரிவு) ஆட்டம் கோல் எதுவுமின்றி 'டிரா' ஆனது. பெரு அணி 1-0 என்ற கணக்கில் ஹைதியை வீழ்த்தி ('பி'பிரிவு) இருந்தது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடந்த ஒரு ஆட்டத்தில் வெனிசூலா- ஜமைக்கா ('சி' பிரிவு) அணிகள் மோதின. இதில் வெனிசூலா 1-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. 15-வது நிமிடத்தில் வெனிசூலா அணிக்காக மார்ட்டினஸ் இந்த கோலை அடித்தார்.

இதே பிரிவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் மெக்சிகோ-உருகுவே அணிகள் மோதின. இதில் மெக்சிகோ 3-1 என்ற கோல் கணக்கில் பலம் வாய்ந்த உருகுவேயை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது. மெக்சிகோ அணியில் ரபெல் மார்கஸ் (85-வது நிமிடம்), ஹீரரா (92-வது நிமிடம்) ஆகியோரும், உருகுவே அணியில் காடினும் (74-வது நிமிடம்) கோல் அடித்தனர். ஆட்டத்தின் 4-வது நிமிடத்தில் உருகுவே வீரர் அல்வாரா பெரைரா சுயகோல் (சேம்சைடு) அடித்தார்.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் 'டி' பிரிவில் உள்ள ஆர் ஜென்டினா- சிலி, பொலிவியா-பனாமா அணிகள் மோதுகின்றன. (க)




# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி ஆஸி அபார வெற்றி

நேதன் லயன், அடம் ஷாம்பா ஆகியோரின் அசத்தலான சுழல்பந்துகள் கைகொடுக்க கயானாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மே.தீவுகள் அணிக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடரின் 2 ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி போனஸ் புள்ளிகளுடன் அபார வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் முதலில் மே.தீவுகள் அணியை துடுப்பாட்டம் செய்ய அழைத்தார்.

இதன்படி களமிறங்கிய மே.தீவுகள் அணி, ஆஸி அணியின் வளரும் நட்சத்திரம் அடம் ஷாம்பா மற்றும் நேத்ன் லயன் ஆகியோரின் சுழல் பந்துகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் 116 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

117 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க, அவுஸ்திரேலிய அணி 25.4 ஓவர்களில் 117/4 என்று போனஸ் புள்ளியுடன் வெற்றி பெற்றது.

மே.தீவுகள் அணி சார்பில் சுனில் நரைன் மீண்டும் அற்புதமாக வீசி 10 ஓவர்களில் 2 மெய்டன்களுடன் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மே.தீவுகள் எடுத்த குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இவ்வோட்ட எண்ணிக்கை பதிவானது.

அவுஸ்திரேலியா வெற்றி இலக்கைத் துரத்தியபோது ஆரோன் பிஞ்ச், உஸ்மான் கவாஜா, ஸ்ரீவ் ஸ்மித் ஆகியோர் ஓரளவுக்குத் சிறப்பாக ஆடினா். கிளென் மக்ஸ்வெல் தான் எதிர்கொண்ட 2ஆவது பந்திலேயே டக் அவுட் ஆனார். சுனில் நரைனின் அருமையான பந்து அது.

வோர்னர் ஐபிஎல் போர்மை தொடர்ந்தார். அவர் 55 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் ஆட்டமிழக்காமல் 55, மிட்செல் மார்ஷ் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்கள் எடுத்து வெற்றியை உறுதி செய்தனர்.

அன்று தென்னாபிரிக்காவை வீழ்த்திய மே.இ.தீவுகள்தானா இது என்ற கேள்வியை எழுப்புமாறு ஒருநாளில் இந்த அணி முற்றிலும் வேறு ஒரு தோற்றத்தை அளித்தது.

70 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகள், பிறகு 91 ஓட்டங்களுக்கு 8 வக்கெட்டுகள் என்ற மீள முடியா சரிவுக்குச் சென்றது. லயன், ஷாம்பாவின் சுழல்பந்தை எதிர்கொள்ள முடியவில்லை. ஆந்த்ரே பிளெட்சர், ஸ்டார்க்கின் வைட் பந்தை நேராக மக்ஸ்வெலிடம் பொயிண்டில் அடிக்க அது பிடியானது. பிறகு மீண்டும் பந்துவீச வந்த போது மே.இ.தீவுகளில் அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கையான 22 ஓட்டங்களை எட்டிய சார்ள்ஸை அருமையான ஸ்விங்கிங் யோர்க்கர் மூலம் காலி செய்தார் ஸ்டார்க்.

டேரன் பிராவோ 3 பவுண்டரிகளை அடித்து நம்பிக்கை அளித்த நிலையில் மிட்செல் மார்ஷிடம் வீழ்ந்தார். நேதன் லயன் பந்து வீச்சில் சாமுவேல்ஸ், பொலார்ட் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தனர். அவர் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். பிராத்வெய்ட், ஹோல்டர், சுனில் நரைன் ஆகியோரை ஷாம்பா வீழ்த்தினார். 32.3 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு மே.இ.தீவுகள் சுரு ண்டது.

அவுஸ்திரேலியா அணி ஆதிக்கம் செலுத்தி வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் உஸ்மான் கவாஜா சிறப்பாக ஆடி 27 ஓட்டங்கள் எடுத்து சுலைமான் பென் சுழலுக்கு வீழ்ந்தார். ஸ்மித் 6 ஓட்டங்களில் நரைனிடம் எல்.பி.ஆனார், ரிபிளேயில் பந்து லெக் ஸ்டம்புக்கு வெளியே செல்லுமாறு தெரிந்தது. மக்ஸ்வெலுக்கு சுனில் நரைன் அருமையான ஓஃப் ஸ்பின்னை வீசினார், அவரும் மிகவும் தளர்வான முறையில் அதை ஆடினார். இதனால் போல்ட் ஆகி வெளியேறினார்.

அதன் பிறகு 92/4 என்ற நிலையிலிருந்து வோர்னர், மார்ஷ் வெற்றியை உறுதி செய்தனர். ஆட்டநாயகனாக ஆஸியின் நேதன் லயன் தேர்வு செய்யப்பட்டார். (க)

# ஃபுட்சால் லீக் கால்பந்தாட்ட போட்டி ரஹ்மான் இசையில் பாடிய ஹோலி



ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானின் பிரத்யேக இசையுடன் கூடிய பிரிமியர் ஃபுட்சால் லீக் எனப்படும் கால்பந்தாட்ட தொடருக்கு விளம்பர தூதராக நட்சத்திர கிரிக்கெட் வீரர் விராட் ஹோலி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது. பி.எப்.எல். எனப்படும் கால்பந்தாட்ட போட்டி இந்தியாவில் நடப்பாண்டு அறிமுகம் செய்யப்படுகிறது. போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த பிரபல கால்பந்தாட்ட வீரர் லூயிஸ் பிகோவை தலைவராக கொண்டு இந்த போட்டி நடத்தப்படுகிறது.

இந்த தொடருக்கான பிரத்யேக பாடலை ஏ.ஆர்.ரஹ்மான் இசைத்திருப்பதோடு அந்த பாடலை விராட்கோலியே பாடியிருப்பது சிறப்பாகும். இந்தியாவில் ஃபுட்சால் கால்பந்தாட்ட விளையாட்டை பிரபலபடுத்தும் நோக்கில் இப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இளம் தலைமுறை கால்பந்தாட்ட வீரர்களுக்கு புதிய கள்மாக இருக்கும் என விராட் கோலி தெரிவித்தார். அடுத்த மாதம் 15ஆம் திகதி தொடங்க உள்ள இந்த தொடரில் 8 அணிகள் பங்கேற்கின்றன. சர்வதேச வீரர்கள் 56 பேரும், இந்திய வீரர்கள் 40 பேரும், அணிகளில் இடம் பெற்றுள்ளதாக பி.எப்.எல். தொடரின் நிர்வாக இயக்குநர் தினேஷ் ராஜ் தெரிவித்தார். (க)

# 'சிங்கலே' அமைப்பின் எதிர்ப்பையடுத்து
# பள்ளிவாசல் நிர்மாணப்பணிகள் ரமழான் முடியும் வரை நிறுத்தம்

(கொழும்பு)

**கண்டி நகர் பெரிய பள்ளிவாசல் நிர்மாணப்பணிகளை ரமழான் மாதம் முடிவுறும் வரையில் இடைநிறுத்தி வைப பதற்கு பள்ளிவாசல் நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர்.**

கண்டி நகர மத்தியில் அமைந்துள்ள ஜும் ஆப் பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு கோரி பள்ளிவாசலின் முன்னாலுள்ள வீதியில் நேற்று முன்தினம் "சிங்கலே" எனும் இனவாத அமைப்பு உட்பட சில குழுக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இதன் போது அப்பிரதேசத்தில் பதற்ற நிலைமை காணப்பட்டது.

குறித்த பள்ளிவாசலில் தற்பொழுது முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகள் சட்டவிரோதம் என மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டே இவ்வமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

இப் பள்ளிவாசலின் மினாரா உயர்த்தப்பட்டால், அது பௌத்தர்களின் புனிதத் தளமான தலதா மாளிகைக்கு உயர செல்வதாக தெரிவித்தே இவர்கள் தங்க ளது ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். கண்டி நகரில் எந்தவொரு கட்டடத்தையும் தலதா மாளிகைக்கு உயரக் கட்டப்படக் கூடாது என புராதன சட்டம் ஒன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# முகநூல் தொடர்பாக 925 முறைப்பாடுகள்

கடந்த ஐந்து மாதங்களில் முகநூல் தொடர்பில் 925 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இணையத்தை பிழையாக பயன்படுத்தியமை தொடர்பில் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

925 முறைப்பாடுகளில் சுமார் 95 வீதமான முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கணனி குற்றச் செயல் விசாரணைப் பிரிவின் பிரதம தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்டவர்களின் இரகசியங்களை பாதுகாக்கும் வகையில் முகநூல் கணக்குகள் உருவாக்கப்படாமையே இதற்கான காரணமாகும் என தெரிவித்தார்.

காதலன், காதலி அல்லது நண்பர்களுக்கு இடையிலான பிணக்குகள் முகநூல் வழியாக மோசமாக பிரதிபலிப்பதாகவும், ஒருவரை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் புகைப்படங்கள், தகவல்கள் வெளியிடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இணைய சமூக ஊடகங்களை பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்தார். (இ-10)

# ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் அவதானமாக செயற்பட வேண்டும்

புனித ரமழான் மாதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் முஸ்லிம்கள் தமது மார்க்க கடமைகளால் சமூகத்துக்கு, அச்சுறுத்தல் மற்றும் தொந்தரவுகள் ஏற்படாத வகையில் அமைதியாகவும் கண்ணியமாகவும் மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் புனித மாதமாக கருதப்படும் ரமழானில் நன்மைகளை அடைந்து கொள்வதற்காக மார்க்க விடயங்களில் அதிகம் கவனம் செலுத்துகின்றோம்.

தராவீஹ், கியாமுல் லைல் உள்ளிட்ட இரவு வணக்கங்களிலும் அதிகம் ஈடுபடுகின்றோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அடுத்த சமூகத்தினருக்கு தொந்தரவு ஏற்படாத வகையில் முஸ்லிம்கள் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் பிறமதத்தவர்களுடன் ஒன்றாக கலந்தே வாழ் கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
(C-4662)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

# பசில் ராஜபக்ஷவின் 14 வாகனங்களுக்கு 100 மில்லியன் ரூபாவிற்கு எரிபொருள்



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் 14 வாக னங்களுக்கு 100 மில்லியன் ரூபாவிற்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதி விசாரணைக்குழுவின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பசில் ராஜபக்ஷ அமைச்சர் பதவி வகித்த போது, பயன்படுத்திய 14 அரச வாகனங்களுக்கும் கொழும்பில் அமைந்துள்ள ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டும் 100 மில்லியன் ரூபாவிற்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எவ்வளவு எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது. கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இந்த எரிபொருளுக்கான கட்டணங்கள் செலுத்தப்பட் டுள்ளன.

பசில் ராஜபக்ஷ பயன்படுத்திய வாகனங்களில் எட்டு வாகனங்கள் குண்டு துளைக்காத வாகனங்கள் எனவும் இதற்காக அதிகளவு எரிபொருள் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் என்ற ரீதியில் 3 வாகனங்களும், ஜனாதிபதி ஆலோசகர் என்ற ரீதியில் ஒரு வாகனமும் பசில் ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட வேண்டும் என்ற போதிலும் பதவியில் இருந்த காலத்தில் மொத்தமாக 14 அரச வாகனங்களை பசில் ராஜபக்ஷ பயன்படுத்தியுள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழு தொடர்ச்சியாக விசாரணைகளை நடத்தி வருகின்றது. (இ-10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திரு. செல்லையா குமாரசிங்கம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
வட. பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர், சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் மற்றும் சங்கானை கரைச்சி மயான சேமக்காலை அபிவிருத்தி சபையின் தலைவருமாகிய திரு. செல்லையா குமாரசிங்கம் (அகில இலங்கை சமாதான நீதிவான்) அவர்களுக்கு 04.06.2016 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் விருது வழங்கிய நிகழ்வின் காவேரி கலாமன்றத்தினால் சமூகக் காவலர் விருது வழங்கியதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
சறோ இல்லம், சங்கானை.
(ு870)

# இராசி பலன்

07.06.2016

(வைகாசி 25, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திருதியை பின்னிரவு 4.31 மணிவரை
திருவாதிரை நண்பகல் 11.59 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி சுக் புத | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை, மூலம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** செய்தொழில் மேன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும் நாள், உடல்நலன் சீராகும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** வெற்றிகரமான செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்:** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பிறர் உதவியுண்டு.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** உடல்நலன் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பொன்னான நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளைக் காண வேண்டிய நாள், தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும், திடீர் மனக் குறைகள் கேட்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு, ஆன்றோரின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவிசெய்ய முன்வரலாம், கனவு பலிதமுண்டு, தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

வளவன்





படங்கள்:- கு.கஜரூபன்

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# சுகாதாரத் தொண்டர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்பாக இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமானது.**

யாழ்.சுகாதார திணைக்களத்தில் சுகாதார பிரிவில் கடந்த 16வருடங்களாக ஆண், பெண் உட்பட 328 பேர் தற்காலிகமாக கடமையாற்றி வருகின்றநிலையில் இதுவரை அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள்வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்கள் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் தொடர்ந்து 16 வருடங்களுக்கு மேலாக சுகாதார தொண்டர்களாக பணியாற்றி வருகின்றோம்.

இதுவரை எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. 22 பேர் கிராமிய சுகாதார தொண்டர்களாகவும் மிகுதிப் பேர் சுகாதாரத் தொண்டராகவே கடமையாற்றி வந்துள்ளோம். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிரந்தர நியமனம் கொடுக்கப்பட்டது.

இருப்பினும் அரசியல் தலையீடு காரணமாக நாம் அதில் புறக் கணிக்கப்பட்டோம். குறுகிய காலம் வேலை செய்த அவ் தொண்டர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் நாங்கள் நீண்ட காலமாகதொடந்துபணியாற்றுகின்றோம். இற்றைவரை இது தொடர்பாக எமக்கு எந்த நியமனங்களும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக கோரிக்கை விடுத்தும் அறிக்கை சமர்ப்பித்தும் எமக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.16 வருடமாக நிரந்தர நியமனம் இல்லாதது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரிடமும் ஆளுநரிடமும் முறைப்பாடுகள் செய்துள்ளோம்.

முதலமைச்சர் நாளை புதன்கிழமை பதில் கொடுப்பதாக தெரிவித்துள்ளார். ஆளுநர் செயலகத்தில் கேட்ட போது இது தொடர்பாக வடக்கு சுகாதார அமைச்சரிடம் கேட்குமாறு கூறியதையடுத்து அவரிடம் கேட்ட போது எமக்கான பதில் தராததை அடுத்து நாம் இக் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.

எமக்கான் நிரந்தர நியமனம் தரும் வரை இப் போராட்டத்தை கைவிடாமல் தொடருவோம் என தெரிவித்தனர்.

இதேவேளை நிரந்தர நியமனத்தைக் கோரி மன்னார் மாவட்ட சுகாதார தொண்டர்கள் கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீதியில் கொட்டப்படுகின்ற குப்பைகளால் துர்நாற்றம்



யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் வீதியில் உள்ள சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு பின்புறத்தில் கழிவுகள், குப்பைகள் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருவதால் துர்நாற்றம் வீசுவதாக பொது மக்களால் யாழ். மாநகர சபைக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ். மாநகர சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-51)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-5)




## களவில் ஈடுபட்ட காவலாளி கைது

### திருநெல்வேலி சந்தையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையில் மரக்கறி திருடிய போது பிடிபட்ட காவலாளி நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சந்தையில் பல நாட்களாக இரவு வேளைகளில் மரக்கறிகள் திருட்டுப் போவதாக வியாபாரிகள் குற்றம் சுமத்தி வந்துள்ளனர்.

குறித்த திருட்டினை முறியடிக்க வியாபாரிகள் சிலர் ஒன்றிணைந்து நேற்று முன்



தினம் இரவுக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது இரவு 7மணியளவில் குறித்த சந்தையில் காவலாளியாக பணிபுரிந்த ஒருவர் வியாபாரிகளின் மரக்கறிகளை துவிச்சக்கர வண்டி ஒன்றில் 2 மூடைகளில் கட்டிய நிலையில் சந்தைக்குள் இருந்து வெளியே வந்துள்ளார். கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் குறித்த காவலாளியை கையும் மெய்யுமாக பிடித்ததுடன் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய காவலாளியை கைது செய்துள்ளனர்.

திருநெல்வேலி சந்தையில் பல நாட்களாக இவ்வாறு வியாபாரிகளின் மரக்கறிகள் திருட்டுப் போகும் சம்பவம் நடைபெற்று வருவதாகவும் வேலியே பயிரை மேய்கின்ற துர்ப்பாக்கிய நிலையில் தாம் உள்ளதாக வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (இ-9)







காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது. சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஆ.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினர்களாக முன்பள்ளிக்கு காணி அன்பளிப்பு செய்த த.தியாகலிங்கம், சு.கதிர்காமநாதன், யாழ்ப்பாணம் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.அன்றூ, தங்கோடை முன்பள்ளியின் ஆரம்பகால ஆசிரியை க.தவமணி ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகர்)

# 76 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



## நீர்வையூர் திரு.ந.சிவசுப்பிரமணியம் அவர்கள்
## (திருமுருகன் செட்டியார்)

நீர்வேலி திருமுருகன் மணிமண்டபம், பல்பொருள் அங்காடியின் உரிமையாளரும்
திருமுருகநாதம், நீரூர் முருகதாசன் ஆகிய பெயர்களைத் தன்பாற்கொண்டவரும்
சைவப்புரவலர், சமூகஜோதி, சிறந்த சமூகசேவையாளர் (வடமாகாணம்) ஆகிய
கௌரவ விருதுகளைப் பெற்றவருமாகிய
'திருமுருகன்' நடராசா சிவசுப்பிரமணியம் அவர்கள்
(தலைவர்,ஸ்ரீமுருகன் அறநெறி பாடசாலை, உப தலைவர், நீர்வேலி கந்தசுவாமி கோயில் , தலைவர், நீர்வேலி முதியோர் சங்கம் , நிர்வாக சபை உறுப்பினர், சீயாக்காடு இந்து மயானம் )

07.06.2016 இன்று நீர்வேலியில் 76 ஆவது பிறந்தநாள் விழாக் காண்பதையிட்டு வாழ்த்துகின்றோம். நீர்வைக் கந்தக்கடவுளின் திருவருளால் நிறைந்த செல்வமும் நீடிய ஆயுளும் உடல் , உள நலங்களும் பெற்றுச் சமூகப்பயனுடையவராய் என்றும் வாழ இனிதாக வாழ்த்துகின்றோம்.

*இனிதான சொந்தங்கள் என்றும் வாழ்த்த*
*நனிநண்பர் அன்பரெலாம் நன்றென் றேத்த*
*தனிமுயன்றீர் தவம்வென்றீர் தகைமை பெற்றீர்*
*இனியுளநாள் திருநாளாய் என்றும் வாழ்வீர்*

**இனிதுற வாழ்த்துவோர்:**

**திருமுருகன் செட்டியாரின் நீர்வைப்பதி அன்பர்கள்.**

(சி-7820)



# சேவைநலன் பாராட்டு

## திருமதி மேரி யோசப்பீன் செல்வராணி முத்துக்குமாரசாமி

Sp. Trained (English), B.A.(Eng.), P.G.D.E, M.A. (Literature)



திருநிறையும் யாழ்ப்பாணம் கோப்பாய் மண்ணும்
திருமதி செல்வராணி முத்துக்குமாரசாமி
மருவினிய கல்விக்காய் இரு தசாப்தம்
மாண்புடனே ஆற்றிய நற்பணிகள் போற்றி
குருவாகிக் குற்றங்கள் களைந்து ஞாலம்
குதூகலிக்க செய்ததொரு பணியை வாழ்த்தி
மெருகோடு மேதினியில் மேன்மை பொங்க
மென்மேலும் நலமோங்க வாழ்த்துகின்றோம்

ஆங்கில ஆசிரிய பயிற்சி- பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி (15.01.1998-31.12.1999)
பொதுக் கலைமாணி- யாழ்.பல்கலைக்கழகம் (09.02.2004-28.04.2006)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (2007-2009)
முதுமாணி (ஆங்கில இலக்கியம்) காமராசர் பல்கலைக்கழகம் (2009-2011)

சேவை விபரம்
யா/ கோப்பாய் நாவலர் வித்தி (ஆசிரியர்) - 21.12.1994-23.01.2003
யா/ கோப்பாய் மகா வித்தி- 24.01.2003-27.03.2011
யா/ மத்திய கல்லூரி - 28.03.2011- 14.01.2013
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (விரிவுரையாளர்)- 15.01.2013-07.06.2016

**வாழ்த்துவோர்:**

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகம்**



ALREADY ISSUED 24000 CERTIFICATES

தெல்லிப்பழையில் யாழ்ப்பாணத்தில் கொழும்பில்

# MICOM THE GREAT

## School of English

SINCE 1997 IN COLOMBO



1.IELTS -
- ❖Academy- Course Fee Rs. 20,000
- ❖General-Course Fee Rs. 15,000
- ❖Life Skills-Course Fee Rs. 20,000

Spoken English With Grammer Diploma In English - English A/L, O/L Course Fee Rs- 15,000 Monthly
English Literature A/L, O/L Course Fee Rs- 25,000 Monthly

*Conducted by*

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
LL.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee michal - the Chief Editor of daily mirror



Contacting Numbers:
077 395 0215,
076 707 7558,
077 284 2556.
Contactable person
Mr.Joganantham

(4814)

Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International



| இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:15<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/4530 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5500 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 58<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/டோகா<br>தொ.இ: B/4533 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 5<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/தனியார் தொழில்<br>தொ.இ: G/5502 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 12<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.COM/ அரசதொழில்<br>தொ.இ: B/4535 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 16 சூரி செவ் 3 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5505 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில் `அவுஸ்ரேலியா<br>தொ.இ: B/4538 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/5510 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# த.தே.கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை விரைவாக கூட்டுங்கள்

## கூட்டமைப்பின் தலைவருக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் கடிதம்

(குருமன்காடு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இறுதியாக 17.02. 2016 அன்று நடைபெற்றிருந்தது. இதன் போது சில தீர்மானங்களை எடுத்திருந்ததோடு தொடர்ச்சியாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை நடத்துவதென்றும் முடிவு எட்டப்பட்டிருந்தது.

எனினும் இற்றைவரையில் சுமார் மூன்றரை மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூட்டுவதற்கான எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதுவொருபுறமிருக்கையில் 2015-01-08 அன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றமொன்று இடம்பெற்றது. இந்த ஆட்சி மாற்றத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பிரதான காரணமாக திகழ்கின்றது.

மேலும் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு தற்போதுள்ள ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதிமொழிகளும் நம்பிக்கை வார்த்தைகளும் அடிப்படையாக இருக்கின்றனவென தாங்கள் எமக்கு தெளிவுபடுத்தியிருந்தீர்கள்.

தற்போது வரையில் புதிய ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடமேறி ஒன்றரை ஆண்டுகளாகின்ற நிலையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதனையும் காணமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையே நீடிக்கின்றமையை உணரக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரின் போது ஏற்கனவே அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக வாய்மூலமான அறிக்கையை சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளது.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னைய காலத்திலிருந்தே வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை அகற்றமாட்டோம், சமஷ்டியை தவிர்த்து ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு, சர்வதேச விசாரணைக்கு இடமளிக்கமாட்டோம் என புதிய ஆட்சியாளர்களும் கூறிவந்த நிலையில், சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை உள்ளக விசாரணை என திருத்தம் செய்து அதனை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் இணை அனுசரணையை வழங்கி ஏற்றுக் கொண்டிருந்தது.

ஆனால் தற்போது மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகளை, விசாரணையாளர்களை, சட்டத்தரணிகளை ஈடுபடுத்தப் போவதில்லையென மிகவும் தெளிவாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அதேவேளை குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரயோக ரீதியாக எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஆகக் குறைந்தது காணாமற்போனோர் விடயத்தை கையாள்வதற்காக அலுவலகங்கள் அமைக்கப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்டுள்ள போதும் அதனைக் கூட தற்போது வரையில் முன்னெடுக்கவில்லை என்பதை தாங்கள் அறிவீர்கள்.

இவ்வாறான ரீதியில் எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு அணுகுவது? என்பது குறித்த தீர்மானமொன்றை எடுக்கவேண்டியுள்ளது.

ஆகவே நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் கூட்டமைப்பு எவ்வாறு அணுகுமுறைகளை பிரயோகிக்கவுள்ளது என்பது ஏக கருத்தாக பகிரங்கப்படுத்தும் முகமாக முடிவொன்று எட்டப்படவேண்டியது அவசியமாகும்.

அதேநேரம் பொதுமக்களின் அன்றாட, நீண்டகால பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்துவதென இறுதியாக நடைபெற்றிருந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் அது குறித்தும் எமது தரப்பிலிருந்து எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னகர்த்தப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் இராணுவம் உள்ளவாறே நிலை நிறுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த காலங்களைப் போன்றே செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

காணிவிடுவிப்பு, மீள்குடியேற்றச் செயற்பாடுகளுக்கு பதிலாக காணி சுவீகரிப்பு, சிங்கள குடியேற்றங்கள் என்பன முன்னெடுக்கப்படுகின்றன. அண்மைக் காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இத்தகைய செயற்பாடுகள் பொதுமக்களின் எதிர்ப்பினால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்ததை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

அதேநேரம் இந்த ஆண்டு நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு பாரிய அழிவுகளுக்கு முகங்கொடுத்துள்ள பிரதேசம் என்பதால் விசேட உட்கட்டமைப்பு, அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைத் தலைவர்களாக இருக்கின்ற போதும் அக் கூட்டங்களில் மத்திய அரசாங்கத்தின் விருப்பிற்கு ஏற்பவே தீர்மானங்கள் எட்டப்படுகின்றன. அத்துடன் வடக்கு மாகாண சபையும் முற்றுமுழுதாகவே புறக்கணிக்கப்படுகின்றது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

மக்களுக்கு எம்மீதுள்ள நம்பிக்கை வீண்போகாமல் இருக்க வேண்டுமாகவிருந்தால் நாம் எடுக்கும் நடவடிக்கைகள் தெரியப்படுத்தப்பட வேண்டும். அதேபோல் எமது ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்துக்கு பிற்பாடு நாம் எடுக்கும் தீர்மானங்களையும் மக்களுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

ஆட்சி மாற்றம் மாற்றங்களை தரும் என எதிர்பார்த்தபோதும் எள்ளளவேனும் முற்போக்கான செயற்பாடுகள் அல்லது ஆக்க பூர்வமான செயற்பாடுகள் இடம்பெறாத நிலையில் எமக்கு வாக்களித்த மக்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. ஆகவே எமது எதிர்கால செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை கூட்டுமாறு வினயமாக கோருகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250-281)

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் வாகனம் மோதியதில் இளைஞனுக்கு சத்திரசிகிச்சை

(குருமன்காடு)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில், கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபரின் வாகனம் மோதியதில் காயமடைந்த இளைஞனுக்கு கால் முறிந்து சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபரான தேசபந்துவின் வாகனம், தாண்டிக்குளம் சந்தியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளைஞனொருவரை மோதியது. இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தரான பிரஸ்தாப நபர் (வயது-22) வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் வலது காலில் மூன்று இடங்களில் முறிவு ஏற்பட்ட நிலையில், அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இளைஞன் தீவிர சிகிச்சை பிரிவில் தொடர்ந்தும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-250)




## மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஊடாக வழங்கல்



மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாடும் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சுவிட்சர்லாந்து நாட்டில் வாழும் புலம்பெயர் அன்பர் ஒருவர் நான்கு மாணவர்களுக்கான உதவிகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடாக வழங்கியுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் வழங்கப்பட்ட இவ்வுதவிகளில் இரண்டு மாணவிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள், நான்கு மாணவர்களுக்கு புத்தகப்பைகள், மூடிய காலணிகள், எழுதுகருவிகள், கணிகருவிப் பெட்டிகள், சீருடைகள், குறிப்பு நூல்கள் என கற்றலுக்கான முழுமையான உதவிகள் வழங்கப்பட்டன. (2-281-250)

## வெளிச்சவீடு அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபா தேவை

முல்லைத்தீவில் வெளிச்சவீடு அமைப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் போது இந்த முல்லைத்தீவு வெளிச்சவீடு 1990ஆம் ஆண்டு சேதமடைந்தது.

2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர், முல்லைத்தீவில் வெளிச்ச வீட்டினை அமைத்து தருமாறும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வெளிச்சவீடு அவசியமானதெனவும் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களினால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுவதாக இணைத்தலைமைகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## தொழில் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வவுனிக்குளம் பாலிநகர் இலங்கை தொழில் பயிற்சி நிலையத்தில் 2016 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்குரிய தொழில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக (NVQ Level) புதிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல், தையல் பயிற்சி, மின்னிணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆதலால் பதிவுகளை எதிர்வரும் ஜூலை மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக மேற்கொள்ளுமாறு நிலைய பொறுப்பதிகாரி செ.திருக்குமரன் அறிவித்துள்ளார். (2)

# புகைத்தல் ஒழிப்பு விழிப்புணர்வு செயற்றிட்டம் கிளிநொச்சி நகர, கிராமங்களில் முன்னெடுப்பு







கிளிநொச்சி மாவட்ட செயலகமும் ராகம (Rahama) ஆகியன இணைந்து கிளிநொச்சியில் புகைத்தல் ஒழிப்பு விழிப்புனர்வு செயற்றிட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்றிட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. சத்தியசீலன் கலந்து கொண்டிருந்தார்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் புகைத்தல் ஒழிப்பு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக குறித்த திட்டம் மாவட்ட செயலக பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் புகைத்தல் பாவனையாளர்களை விழிபபூட்டும் நோக்குடன் குறித்த செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மதுபானம் ,புகைத்தல் போதைப்பொருள் பாவனையைத் தடைசெய்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கிளி.மாவட்ட செயலகத்தால் கிராமப் பகுதிகளில் பெரியளவில் நடைபெற்றது. மதுபானம் குடித்த பின்பு மதுபானத்தின் பின்னணியில் இடம்பெறும் பல நடத்தைகளைஉங்களால் மாற்றமுடியும். '. மதுபானம் குடித்த பின்பு மூளைக்கு உண்டாகும் தாக்கத்தால் மதுபானம் குடிப்பவர்கள் செய்பவை, சொல்பவை அவர்கள் அறியமாட்டார் என்பது பழைமையான நம்பிக்கைகள். ஆனால் உண்மை என்னவெனில் மதுபானப் பாவனையின் பின்னர் நடந்து கொள்ளும் விதம் சுய நினைவுடன் சொல்வதும் செய்வதும் நன்றாகத் தெரிந்து கொண்டேயாகும். மதுபானம் குடித்த பின்பு வீட்டில் சண்டித்தனம் காட்டுவார். பொலிஸ் நிலையத்தில் அமைதியாக இருப்பார். பொறுமை காக்கும் மனைவி இருக்கும் வீட்டில் சண்டித்தனம் காட்டுவார். எதிர்ப்பைக்காட்டும் மனைவி இருக்கும் வீட்டில் அமைதியாக இருப்பார். கிராமத்தில் நடக்கும் திருமண வீட்டிற்கும் கெட்டவார்த்தைகளால் திட்டுவார். திருமண மண்டபங்களில் அமைதியாக இருப்பார். வீட்டில் எந்நாளும் மனைவிக்கு அடிப்பவர் மச்சான் வீட்டிற்கு வரும் போதுஅமைதியாக இருப்பார் என்பதை சுட்டிக் காட்டும் துண்டுப் பிரசுரம் மற்றும மதுபானம், போதைப் பொருள்பாவனையைக்குறைக்க பெண்கள் என்ன செய்யலாம். மதுபானத்தை அருந்தாமல் வரும் நாளை சந்தோசமாகக் கழிக்க வேண்டுமென்றால் என்ன செய்யலாம். என்பனவற்றை தெளிவுபடுத்தும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் இந்தக் காலத்து மொடன் கேர்ள்ஸ் சிகரட் சாராய நாற்றமற்ற இளைஞர்களையே விரும்புகின்றனர் என்னும் ஸ்ரிக்கரும் விநியோகிக்கப்பட்டது. (2-15-254)

## இ.போ.ச.- தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இடையில் நிலவுகின்ற பிரச்சினையால் பயணிகள் அவதி

### வ.மா.போக்குவரத்து அமைச்சரவை கவனத்திற்கொள்ளுமாறு கோரிக்கை

இலங்கை போக்குவரத்து சேவைக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையில் வீதிகளில் நிலவும் பாரிய போட்டிகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்து வருவதாகவும் அவர்களுக்கிடையான போட்டி காரணமாக பயணிகள் பல்வேறு அசௌகரியங்களையும் விபத்துக்களையும் எதிர்கொள்வதாகவும் இதனை வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் பய



ணிகள்,பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் பேருந்து வண்டிகளை நிறுத்தி கைகலப்பில் ஈடுபடுவதுடன் பேருந்துகளுக்கு கல் வீசித் தாக்குதல் செயவதும்பேருந்தை கொண்டு வந்து மற்றைய பேருந்திற்கு முன்னால் நிறுத்தி கைகலப்பில் ஈடுபடுவதும் தொடர்கதையாகிறது. இதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்து பயணிகள் நிம்மதியாக பயணத்தை மேற்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு பொது மக்கள் வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை கோரியுள்ளனர்.

இவ்வாறான ஒரு சம்பவம் நேற்றுக்காலை ஒட்டுசுட்டானில் இடம்பெற்றது. முல்லைத்தீவிலிருந்து புதூர் கோவிலுக்கு சென்ற இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் முல்லைத்தீவிலிருந்து வவுனியா சென்ற தனியார் பேருந்தும் போட்டியிட்டு பயணம் செய்த வேளை ஒட்டுசுட்டான் சந்தியில் மக்களை ஏற்றுவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நிறுத்தப்பட்டது. இதை முந்தி சென்று அதற்கு முன்னால் நிறுத்தி பயணிகளை ஏற்ற முயற்சித்த முல்லைத்தீவிலிருந்து வவுனிய சென்றதனியார்பேருந்தும்மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தெய்வாதீனமாக பயணிகளுக்கு எதுவும் நிகழவில்லை. இந்த தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பயணங்கள் வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சருக்கு கோரிக்கை விடுக்கின்றனர். இதை விட இவ்வாறான போட்டியால் அண்மையிலும் யாழ்ப்பாணத்தில் சிறுவன் ஒருவன் மரண மடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-281)




## மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்படாமையினால் சடலங்களை பிரேத பரிசோதனை செய்யமுடியவில்லை

### முல்லை.ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவு,கருநாவல்பட்டு தெற்கு (மாங்குளம்) ஆகிய இடங்களுக்கான மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்படாமையால் சடலங்களை பிரேத பரிசோதனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் சடலங்களை பல மைல் தூரத்திற்கப்பாலுள்ள வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை அல்லது கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியவற்றிற்கு எடுத்துச்சென்று மரண விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவுமாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் பிரதேச பொது அமைப்புக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மேற்படி 3 இடங்களிலும் மக்களின் இடப்பெயர்விற்கு முன்னர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

நடைபெற்று முடிந்த யுத்தத்தை அடுத்து கருநாவல்பட்டு தெற்கு மரண விசாரணை அதிகாரி எறிகணை வீச்சின்போது மரணமடைந்தார்.

இந்நிலையில் மக்கள் மீள் குடியேறி 7 வருடங்கள் கடந்த நிலையிலும் மூன்று இடங்களுக்கும் இதுவரை மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை.

துணுக்காய்அல்லதுமாந்தை கிழக்கில் இருந்து சடலமொன்றை மரண விசாரணையின் நிமித்தம் கிளிநொச்சி அல்லது வவுனியாவிற்கு கொண்டு சென்று திரும்பி வருவதற்கு 50 ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலவாகின்றது.

இதன்போது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள்பெரும்அவலநிலையை எதிர்கொள்கின்றனர் என ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-15)

## மன்னார் மடு திருத்தலத்தின் திருவிழாவையொட்டி மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா எதிர்வரும் ஜுலை மாதம் 2ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் மடுத்திருத்தளத்திற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை வருவார்கள் என எதர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியானஸ்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மடு அன்னையின் ஆடி மாத திருவிழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற போது திருவிழாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக குடிநீர், பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து,உணவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து அன்றைய தினம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. குறித்த வசதிகளை மடு திருத்தலத்தில் மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மடுதிருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா எதிர்வரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதி திருவிழா திருப்பலியுடனும் அன்னையின் ஆசீருடனும் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (2-4)

## அமைதிபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு சமையல் உபகரணங்கள் வழங்கல்

(மல்லாவி)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டபிரிவின்கீழுள்ளதுணுக்காய் பிரதேச செயலக பிரிவில் அண்மையில் எதிர்கொண்ட சீரற்ற காலநிலை அனர்த்தம் காரணமாகஏற்பட்டமழை வெள்ளத்தையடுத்து அமைதிபுரம் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் தங்கியிருந்த 22 குடும்பங்களுக்குதலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு இலட்சத்து 54 ஆயிரம் ரூபாவிற்கான சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் துணுக்காய் பிரிவுத் தலைவர் ஜீவகாருண்யம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது சுமார் 516 குடும்பங்களுக்கு மேற்பட்டோர் பாதிப்பை எதிர்கொண்டிருந்தனர்.

இவர்களின் மிகவும் பின்தங்கிய கிராமமான அமைதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 22 குடும்பங்கள் கடுமையான பாதிப்பை எதிர்நோக்கி இடம்பெயர்ந்து அமைதிபுரம் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் இவர்களுக்கான சமைத்த உணவுப் பொதிகளை பிரதேச செயலாளர் வழங்கியிருந்த நிலையில் சமையல் உபகரணங்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டப் பிரிவின் நிறைவேற்று அதிகாரி எஸ்.சதீஸ்வரன், அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் இணைப்பாளர் க.நிதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவியை வழங்கி வைத்தனர். (2-15)



# போர்க்களமானது இராணுவ முகாம்



















(கொழும்பு)

அவிசாவளை கொஸ்கம - சலாவ இராணுவ முகாமிலுள்ள ஆயுதக் களஞ்சிய சாலையில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. மேலும் தற்போது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதோடு குறித்த பிரதேசம் யுத்த களம் போன்று காட்சியளிக்கின்றது. மேலும் அவிசாவளை பகுதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொஸ்கமவில் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து, அப்பிரதேசத்தில் குடிநீரை பயன்படுத்தும் போது, முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களுக்கு அவசர உதவி



கள் தேவைப்படுமாயின் 117 என்ற அவசர இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த விபத்தால் அப்பகுதியில் இருந்த பாடசாலைகள், வீடுகள், வைத்தியசாலைகள், வீட்டில் இருந்த பொருட்கள் மற்றும் வாகனங்கள் என அனைத்தும் சேதமாகியுள்ளன.

மேலும் குறித்த விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் பலியாகியுள்ளதுடன் 47 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் 39 பேர் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மேற்படி வெடிப்புச் சம்பவத்தால் இராணுவ முகாமிலிருந்து 6 கிலோ மீற்றர் தொலைவு வரையில் குடியிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

கொஸ்கம, சலாவ இராணுவ முகாமில் உள்ள ஆயுத களஞ்சியமானது இரா ணுவத்தின் பிரதான களஞ்சியங்களில் ஒன்றாகும். இங்கு ரீ - 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் முதல் ஆர்.பி.ஜி. மல்டி பெரல் தோட்டாக்கள் வரை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் மாலை 5.42 மணிக்கு ரீ-56 ரக தோட்டாக்கள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் முதலில் இரு வெடிச்சத்தங்கள் கேட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மறு பகுதியில் மேலும் சில வெடிப்புச் சத்தங்கள் கேட்டுள்ளன. இந் நிலையிலேயே தீ பரவ ஆரம்பித்து பாரிய அதிர்வுகளுடன் தொடர்ச்சியாக வெடிச் சத்தங்கள் கேட்டுள்ளன.

இராணுவத்தின் இலத்திரனியல் மற்றும் இயந்திர படைப் பிரிவின் கட்டுப்பாட்டிலேயே இந்த இராணுவ முகாம் உள்ளது.

இராணுவ உள்ளக தகவல் ஒன்றின் படி வெடிப்புக்கள் மற்றும் அதன் அதிர்வுகளால் நள்ளிரவு 12 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஒரு இராணுவ வீரர் உயிரிழந்துள்ளதுடன் 39 காயமடைந்துள்ளனர். 10 சிவில் கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

இந்தநிலையில் குறித்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் சலாவ இராணுவ முகாமிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் வசிப்பவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு திரும்பலாம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெடிப்புக்கு உள்ளான பொருட்கள் பிரதேசத்தின் பல பகுதிகளில் காணப்படுவதாகவும், அவற்றைக் கண்டால் கைகளால் தொட முயற்சிக்க வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன்,குறித்த பொருட்களை கண்டால் 011 381 8609 அல்லது 011 243 4251 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தையடுத்து அவிசாவளை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட அரச பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தும் நேற்றைய தினம் மூடப்படுள்ளதுடன், வெடிப்பு நிகழ்ந்துள்ள பகுதி வீதிகள் மூடப்பட்டுள்ளமையால் வாகன சாரதிகளுக்கு மாற்று வீதிகளை போக்குவரத்திற்கு பயன்படுத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இராணுவ முகாமை அண்மித்த பகுதிகளில் இன்னும் புகைமூட்டம் நிலவுவதால் குறித்த பகுதியில் சுவாசிப்பதால் சுவாசக் கோளாறுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் ஈரத்துணியால் முகத்தை மறைத்து சுவாசிப்பதே சிறந்தது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இரண்டு ஆயுதக் கிடங்குகள் நாசம் விமானங்கள் மூலம் கண்காணிப்பு



(கொழும்பு)

கொழும்புக்குக் கிழக்காக, 36 கி.மீ தொலைவில் உள்ள கொஸ்கம- சலாவ இராணுவ முகாமில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பாரிய வெடிவிபத்தில் இரண்டு ஆயுதக் கிடங்குகள் முற்றாக நாசமானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 5.47 மணியளவில், முதலாவது குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதையடுத்து, ஆயுதக் கிடங்கு ஒன்று தீப்பற்றி எரியத் தொடங்கியது.

அங்கிருந்த வெடி பொருட்கள் வெடித்துச் சிதறியதால், அருகில் இருந்த மற்றொரு ஆயுதக் கிடங்கிலும் வெடி விபத்து ஏற்பட்டது.

இங்கு கனரக ஆயுதங்களுக்கான வெடிபொருட்களே அதிகளவில் சேமிக்கப்பட்டிருந்ததால், பாதிப்பும் இழப்புகளும் அதிகமாக ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்திடம் உள்ள மிகப் பெரிய ஆயுதக் கிடங்குகளில், சலாவ முகாம் ஆயுதக் கிடங்கும் ஒன்றாகும்.

இந்த விபத்தை அடுத்து, ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு, தீயணைப்புப் படையினரால் நெருங்கவே முடியாதிருந்தது. இதனால், தீ தானாகவே அணையும் வரை அவர்கள் காத்திருக்க நேரிட்டது.

இந்த வெடிவிபத்தினால் ஏற்பட்ட நிலைமைகளை தரையில் இருந்து கண்காணிக்க முடியாததால், விமானப்படையின் ஒரு ஆளில்லா வேவு விமானம் மற்றும் பி-200 பீச்கி ராப்ட் கண்காணிப்பு விமானம் ஆகியன தொடர்ச்சியாக பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. (இ-10)

# அர்ஜுன் மகேந்திரனுக்கெதிரான குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு

## மத்திய வங்கி அறிக்கை



மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியினால் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் பொது மக்களின் நிதியை தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்துவதாக தெரிவித்து குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், மத்திய வங்கியின் ஆளுநரோ அல்லது மத்திய வங்கியின் ஊழியர்களோ தமது தனிப்பட்ட தேவைகளுக்காக பொது மக்களின் ஒரு சதத்தினையேனும் பயன்படுத்தவில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் நிர்வாகத்தினர் கடமை நிமித்தம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயணங்களின் போது அதன் செலவீனத்தை மத்திய வங்கியே பொறுப்பேற்கும்.

இது அனைத்து நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் பொதுவான ஒரு இடமாகும். கடந்த காலங்களில் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட உறுப்பினர்கள் சில வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய வலய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பு, தெற்கு கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆய்வு மற்றும் பயிற்சி மத்திய நிலையம் ஆகியவற்றினால் வருடாந்தம் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இவ்வாறான பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2014ம் ஆண்டு அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிர்வாகத்தினரின் உத்தியோகபூர்வ பயணங்களுக்காக 133.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டு 96.6 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 37.2 மில்லியன் ரூபா குறைவாகவே செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-10)



யாழ். ராகஸ்வரம் இசைமன்றத்தின் ஏற்பாட்டில் ''நமது கிராமம் நமது மக்கள்'' என்ற தொனிப்பொருளில் அமைந்த கொழும்புத்துறை மாணவர்களின் பேசும் படங்களின் கண் காட்சி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தன் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

### யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத்தை மேம்படுத்த

# சகல பிரதேச செயலர் பிரிவிலும் 'மாதிரி சுகாதார கிராமம்' தெரிவு

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மாதிரி சுகாதார கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேநந்த குமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் டெங்கு வார மீளாய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ''சுகாதார மேம்பாட்டுக்கிராமம்'' அல்லது ''மாதிரி சுகாதார கிராமம்'' தெரிவு செய்யப்பட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஜே/ 407 கிராம சேவகர் பிரிவிலுள்ள மாதனை கிராமமும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/261 கிராம் சேவகர் பிரிவிலுள்ள கோப்பாய் மத்தி, சூசையப்பர் வீதி பகுதியும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஜே/44 காரை தெற்கு கிராம. சேவகர் பிரிவிலுள்ள ஊரி கிராமமும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் ஜே/430 கிராம சேவகர் பிரிவிலுள்ள உடுத்துறை கிராமமும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஜே/10 கிராம சேவகர் பிரிவில் உள்ள அல்லைப்பிட்டி கிராமமும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஜே/60 கிராம சேவகர் பிரிவிலுள்ள சின்னமடு கிராமமும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஜே/294 கிராம சேவகர் பிரிவிலுள்ள நாவற்குழி மேற்கு பகுதியும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் ஜே/359 கிராம சேவகர் பிரிவிலுள்ள இமையாணன் மேற்கு பகுதியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/133 கிராம சேவகர் பிரிவிலுள்ள முள்ளி கிராமமும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஜே/195 கிராம சேவகர் பிரிவிலுள்ள மயிலணி கிராமமும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் ஜே/77 கிராம சேவகர் பிரிவிலுள்ள மருதடி கிராமும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஜே/144 கிராம சேவகர் பிரிவிலுள்ள பண்ணைவீதி பாரதிபுலம் கிராமமும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் ஜே/03 கிராம சேவகர் பிரிவிலுள்ள 6 ஆம் வட்டாரம் சிக்கரி அம்பலம் கிராமமும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் கொல்லங்கலட்டி கிராம சேவகர் பிரிவிலுள்ள மாவை கலட்டி கிராமும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஜே/172 கிராம சேவகர் பிரிவிலுள்ள பெரியபுலோ கிராமமும் அந்தந்த பிரதேச செயலகத்தாலும் அந்தந்த சுகாதார சேவைகள் பணிமனையினாலும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்குறித்த கிராமங்களை அமையவுள்ள மாதிரி கிராமங்களில் சுகாதாரத்துறை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் ஒவ்வொரு பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்டு தொடர்ச்சியான நீண்ட கால திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மாதிரிச் சுகாதார கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு நீண்டகாலசெயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு இரண்டாம் திருவிழா



## நயினையிலே அம்மன் திருவிழா காண்கிறாள்

நயினையிலே திருவிழா
எங்கள் நாகபூஷணி அம்மனுக்குப் பெருவிழா
அலை அலையாய் பக்தர்கள் கூட்டம்
அவளையே என்றும் போற்றிப்பாடும்
நம் துன்பமெல்லாம் பறக்கிறது
உன் சந்நிதியில் நித்தம் பல அற்புதங்கள் நடக்கிறது
நாமும் நயினைக்குச் சென்று வருவோம்
மனதில் சஞ்சலங்களை
அகற்றி சுகமாய் வாழ்ந்திடுவோம்.

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மாற்றம் வேண்டும் நயினை அம்மா

நேற்றிருந்த வாழ்வு மாறும் என்று தினம் ஏங்கி
காற்றிடையே கயிறறுந்த பட்டம் போல் –தவிக்கிறோம்
மாற்றம் ஒன்று வேண்டும் என்று மனமுருகி
ஏற்றினோம் நேற்று கொடியொன்று உனக்கு
தேற்றுவார் எவருமின்றி தேம்பி அழும் எம்வாழ்வில்
மாற்றம் ஒன்று வேண்டுகிறோம் நயந்திடுவாய் நயினை அம்மா.

சா.தணிகாசலபதி
அளவெட்டி.

## நாகம் பூ அணி

நாகம் பூ அணி செய்யப்பட்டவளே தாயே
பொங்கி எழும் கடல் ஓரத்தில் வண்ணக்கோவிலில்
ஆதிமூல மதில் சிங்காரியாய் அமர்ந்து அருள் சொரிபவளே
நயினை நகர் சிறக்க நாகபூஷணியாய் அமர்ந்திருப்பவளே
நாகம் படம் எடுத்து நிழல்தர அதில் அமர்ந்திருப்பவளே
பொங்கும் கடல் தாண்டி உன்னை தரிசித்து அருள் பெறவே
ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் நாடித்தேடி ஓடி வந்தே
உன்பாத மலர் பணிந்தெழ வல்வினை தொல்வினை நீங்கிடுமே

நீரூர் முருகதாசன்



## பொதுமக்கள் முன்னிலையில்

# ஈராக்கில் 19 பெண்களை எரித்துக்கொன்ற ஐ.எஸ்



ஈராக் நாட்டில் யாஷிய இனத்தை சேர்ந்த 19 பெண்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் இரும்பு கூண்டில் அடைத்து கொடூரமாக எரித்து கொலை செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கில் உள்ள மொசூல் நகரத்தை சேர்ந்த Abdullah al-Malla இந்த பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

சிறுபான்மை இனத்தவரான குர்து யாஷிய பெண்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் கடத்தி சென்று அடிமைகளாக பயன்படுத்தி வருகின்றனர்.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் விருப்பத்தை நிறைவேற்றாத பெண்களை அவர்கள் கொடூரமாக கொலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தீவிரவாதிகளின் விருப்பத்திற்கு பணிய மறுத்த 19 யாஷிய பெண்களை கடந்த வியாழக்கிழமை அன்று இரும்புக் கூண்டில் ஐ.எஸ் தீவிரவாதிகள் அடைத்தனர்.

பின்னர், அந்த கூண்டுகளை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் இழுத்து வந்து கூண்டுக்குள் இருந்த 19 பெண்கள் மீது திராவகம் ஊற்றி தீயிட்டு எரித்து கொன்றுள்ளனர்.

கண் முன் நிகழ்ந்த கொடூரத்தை தடுக்க முடியாமல் பொதுமக்கள் திரும்பி சென்றுவிட்டதாக அந்த செய்தியாளர் தகவலை வெளியிட்டுள்ளார். (இ-10)

# பெல்ஜியத்தில் ரயில்கள் மோதி விபத்து மூன்றுபேர் உயிரிழப்பு;40பேர் படுகாயம்



பெல்ஜியம் நாட்டின் கிழக்குப் பகுதியில் ஒரே தண்டவாளத்தில் சென்ற சரக்கு ரயிலுடன் பயணிகள் ரயில் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

பெல்ஜியம் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள செயிண்ட் ஜார்ஜஸ் சர் மியுசே மாவட்டத்தில் சுமார் 50 பயணிகளுடன் சென்ற ரயில் (உள்ளூர் நேரப்படி) நேற்று முன்தினம் நள்ளிரவு முன்னால் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது.

இதனால் பயணிகள் ரயிலின் இரண்டு பெட்டிகள் தண்டவாளத்தில் இருந்து விலகி தடம் புரண்டது.

இந்த விபத்தில் மூன்றுபேர் உயிரிழந்ததாகவும் சுமார் 40 பேர் காயமடைந்ததாகவும் முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், முன்னால் சரக்கு ரயில் சென்றுகொண்டிருக்கும் நிலையில் அதே தண்டவாளத்தின் மீது பயணிகள் ரயில் செல்ல எப்படி அனுமதி அளிக்கப்பட்டது? என்பது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. (இ-10)

# சீன நாட்டில் சுற்றுலா படகு ஏரியில் கவிழ்ந்து விபத்து குழந்தை பலி; 14 பேர் மாயம்

(பீஜிங்)

சீனாவில் சிச்சுவான் மாகாணத்தில் பெய்லாங் ஏரி உள்ளது. சுற்றிலும் மலை சூழ்ந்துள்ளதால் சுற்றுலா பயணிகளை அந்த ஏரி பெரிதும் கவர்ந்துள்ளது. அந்த ஏரியில் உல்லாச படகு சவாரி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை நண்பகல் ஒரு சுற்றுலா படகு, 18 பேரை உல்லாச சவாரிக்கு அழைத்து சென்றது.

ஆனால் அப்போது பலத்த காற்று வீசியதால், அந்த படகு சற்றும் எதிர்பாராத வகையில் ஏரியில் கவிழ்ந்து விட்டது. இது குறித்து தகவல் அறிந்ததும், மீட்பு பணி முடுக்கி விடப்பட்டது.

இதில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஆனால் அந்த குழந்தைக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த போது பலனின்றி பரிதாபமாக இறந்தது.14 பேரை காணவில்லை. அவர்கள் தேடப்பட்டு வருகின்றனர். (இ-10)

## திடீர் வெள்ளப்பெருக்கில்

# இராணுவ வாகனம் கவிழ்ந்து 9பேர் பலி

அமெரிக்காவில் இராணுவ வாகனம் வெள்ள நீரில் கவிழ்ந்து 9 வீரர்கள் உயிரிழந்தனர்.

டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த போர்ட் ஹூட் இராணுவப் பயிற்சி மையத்தில் இந்த விபத்து கடந்த வியாழக்கிழமை ஏற்பட்டது.

இதுகுறித்து பயிற்சி மைய செயதித் தொடர்பாளர் டைலர் பிராட்வே தெரிவிக்கையில்,

முக்கிய பயிற்சியகத்திலிருந்து நீண்ட தொலைவில் அமைந்துள்ள வனப் பகுதியில், இராணுவ வாகனத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஆழம் குறைவான நீர் நிலையை அந்த வாகனம் கடக்க முயன்றபோது திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

அதில் இராணுவ வாகனம் எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றார் அவர்.

இந்த விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும், மூவர் மீட்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், விபத்துப் பகுதியிலிருந்து மேலும் 4 வீரர்களின் உடல்கள் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, பலியானவர்களின் எண்ணிக்கை 9ஆக உயர்ந்தது. மீட்கப்பட்ட 3 வீரர்களும் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியதாக போர்ட் ஹூட் பயிற்சி மையத்துணைத் தளபதி உபேர்டி தெரிவித்தார். (இ-10)

## பிரதமர் மோடி முன்னிலையில்

# இந்தியா - கட்டார் இடையே 7ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(டோகா)

இந்தியப் பிரதமர் மோடி முன்னிலையில் இந்தியா-கட்டார் இடையே 7 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியப் பிரதமர் மோடி 5 நாடுகள் சுற்றுப்பயணத்தின் 2ஆம் கட்டமாக ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த சனிக்கிழமை மாலை எண்ணெய் வளம் மிகுந்த வளைகுடா நாடான கட்டாருக்கு சென்றார். தலைநகர் டோகா நகர விமான நிலையத்தில் அவரை கட்டார் பிரதமர் அப்துல்லா பின் நாசர்பின் கலிபா அல்-தானி வரவேற்றார்.

அன்று இரவு டோகா அருகேயுள்ள மெஷெரிப் நகரில் தொழிலாளர்கள் மருத்துவ முகாமில் கட்டாரில் பணிபுரியும் இந்திய தொழிலாளர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார். பின்பு அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டார்.

தனது 2ஆம் நாள் பயணத்தின் முதல் நிகழ்ச்சியாக நேற்று முன்தினம் கட்டார் நாட்டின் தொழிலதிபர்களையும் முதலீட்டாளர்களையும் வட்டமேசை கூட்டத்தில் அவர் சந்தித்து பேசினார். இதில் அந்நாட்டின் பிரபலமான 10இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பிரதமர் மோடி,

தொழில் முதலீடு வாய்ப்புகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இந்தியா அரியதொரு பூமியாகும். இந்த வாய்ப்பை நீங்கள் முன்னுரிமையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களை இங்கே அழைத்து இருக்கிறேன்.

இந்தியாவில் நீங்கள் முதலீடு செய்வதற்கு மிகவும் உகந்த துறைகளாக உணவு பொருட்கள் பதப்படுத்தல், ரயில்வே, சூரியஒளி மின்சக்தி போன்றவை உள்ளன. கட்டமைப்பு, விரிவாக்கம், மேம்படுத்துதல், உற்பத்தி ஆகியவையும் முதலீடுகளை ஈர்ப்பதற்கான துறைகள் ஆகும்.

நீங்கள் அனைவரும் இந்தியாவின் வளத்தை உணர்ந்து இருப்பீர்கள். இந்தியாவில் தொழில் முதலீடு செய்வது தொடர்பாக நீங்கள் இங்கே சுட்டிக்காட்டிய குறைபாடுகளுக்கு தீர்வு காணப்படும். இந்தியாவில் 80 கோடி இளைஞர்கள் உள்ளனர். இது எங்கள் நாட்டின் மிகப்பெரிய பலம்.

இப்போது, ஸ்மார்ட் சிட்டி, மெட்ரோரெயில்கள், நகர்ப்புற கழிவு மேலாண்மை போன்ற திட்டங்களும் மக்களின் தரத்தை உயர்த்துவதற்காக முடுக்கி விடப்பட்டு இருக்கின்றன. எனவே இத்துறைகளிலும் முதலீடுகள் செய்யலாம்.





இந்தியா-கட்டார் இடையே வர்த்தக உறவுகள் மேம்படுவதற்கு கட்டார் மன்னர் ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானி மிகுந்த ஒத்துழைப்பு அளிப்பதற்கு பாராட்டுகள் எனத் தெரிவித்தார்.

முன்னதாக இந்தியப்பிரதமர் மோடி, கட்டார் நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார துறை அமைச்சர் அகமது பின் ஜசிமை சந்தித்து பேசினார்.

இதைத்தொடர்ந்து கட்டார் மன்னர் ஷேக் தமிம் பின் ஹமத் அல்-தானியை மன்னரின் அரண்மனையில் நேற்றுமுன்தினம் மாலை மோடி சந்தித்தார். அங்கு அவருக்கு பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஷேக் தமிமுக்கு 36-வது பிறந்த நாள் வாழ்த்தும் மோடி தெரிவித்தார். ஏற்கனவே 2 நாட்களுக்கு முன்பு மன்னர் ஷேக் தமிம் தனது பிறந்தநாளை கொண்டாடிய போதும், அவருக்கு மோடி வாழ்த்து தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டார் மன்னருடனான பேச்சுவார்த்தையின்போது, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும்படி மோடி கேட்டுக் கொண்டார்.

பின்னர் இருநாடுகளுக்கும் இடையே ஏழு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

பிரதமர் மோடி, கட்டார் மன்னர் ஷேக் தமிம் பின் ஹமத் அல்-தானி ஆகியோர் முன்னிலையில் இந்தியா-கட்டார் நாடுகளின் உயர் அதிகாரிகள் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

சட்டவிரோத பண பரிவர்த்தனை மற்றும் தீவிரவாத செயல்களுக்கு நிதி உதவி அளிப்பதை தடுப்பது, கட்டமைப்பு துறைகளுக்கு கட்டாரில் இருந்து முதலீடுகளை ஈர்ப்பது, திறன் மேம்பாடு, கல்வி, சுகாதாரம், சுற்றுலா மேம்பாடு, விளையாட்டு ஆகிய 7 துறைகளில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

தனது கட்டார் பயணத்தை முடித்துக்கொண்டு அடுத்தகட்ட பயணமாக பிரதமர் மோடி, சுவிட்சர்லாந்து நாட்டுக்கு புறப்பட்டுச் சென்றார். நேற்றுமுன்தினம் இரவு அவர் ஜெனீவா நகர் சென்றடைந்தார். (இ-10)

# பாலம் இடிந்து விழுந்து 50பெண்களுக்கு காயம்



சென்னை தீவுத்திடலில் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பாலம் இடிந்து விழுந்ததில் 50 பெண்கள் காயமடைந்துள்ளனர்.

பெண்களுக்கான சிறப்பு மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்க நூற்றுக்கணக்கான பெண்கள் தீவுத்திடல் பகுதியில் நேற்றுக்காலை கூடியிருந்தனர்.

வாகனங்கள் நிறுத்துமிடப் பகுதியிலிருந்து போட்டி ஆரம்பமான பகுதிக்கு செல்ல அவர்கள் தற்காலிக பாலம் ஒன்றை கடந்துள்ளனர்.

அப்போது போட்டியில் பங்கேற்க வந்திருந்தவர்களிடம் பாதுகாப்பு சோதனை நடத்த முற்பட்ட போதே, அந்த ஆற்றுப்பாலம் மீது நூற்றுக்கணக்கான பெண்கள் நிற்க வேண்டிய நிலை ஏற் பட்டது.

ஒரே சமயத்தில் ஏராளமான பெண்கள் அந்த பாலத்தின் மீது நின்று கொண்டிருந்த சமயத்தில் பாலத்தின் நடுவே பிளவு ஏற்பட்டு அது சரிந்தது.

இந்த விபத்தில் கிட்டத்தட்ட 50 பெண்கள் ஆற்றிற்குள் விழுந்துள்ளனர். ஆற்றில் நீர் அதிக அளவில் ஓடாத காரணத்தாலும், சேறும் சகதியுமாகவே இருந்த காரணத்தாலும், விழுந்தவர்களுக்கு மிகப்பெரிய காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் அதே சமயம் சாக் கடை போன்ற துர்நாற்றத்துடன் கூடிய அந்த ஆற்றில் விழுந்ததால், சில பெண்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர். (இ-10)

# இந்தியப் பிரதமர் ஜெனிவா விஜயம்

## இன்று அமெரிக்கா செல்கிறார்






ஆப்கானிஸ்தான், கட்டாரை அடுத்து ஐந்து நாடுகள் சுற்றுப்பயணத்தின் மூன்றாவது கட்டமாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று சுவிட்சர்லாந்து தலைநகர் ஜெனிவா சென்றடைந்தார்.

சுவிட்சர்லாந்து பயணத்தை நிறைவு செய்யும் பிரதமர் மோடி, அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அளிக்கும் சிறப்பு விருந்தில் இன்று 7 ஆம் திகதி பங்கேற்கிறார்.

அங்கி ருந்து மெக்சிகோ நாட்டுக்கு செல்லும் அவர் அந்நாட்டின் ஜனாதிபதியை சந்தித்து இந்தியா-மெக்சிகோ இடையிலான நட்புறவை பலப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தவுள்ளார். (இ-10)

# ஆஸியில் புயலால் மூவர் உயிரிழப்பு





(சிட்னி)

சிட்னி உட்பட அவுஸ்திரேலியா நாட்டின் கிழக்கு கடலோர மாவட்டங்களை பெருமழையுடன் தாக்கிய புயலுக்கு இதுவரை மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

அவுஸ்திரேலியா நாட்டின் கிழக்கு கடலோர மாவட்டங்களில் கடல்சீற்றத்துடன் பெருமழை பெய்தது. மழையுடன் புயல் காற்றும் சுழன்று அடித்ததால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸ் நகரில் உள்ள நியூ கேஸ்டில் துறைமுகம், கெம்ப்லா உள்ளிட்ட நாட்டின் முக்கிய துறை முகங்கள் மூடப்பட்டுள்ளன. ஏ.ரி.எம்., இயந்திரங்கள் மற்றும் இன்டர்நெட் சேவை முடங்கியுள்ளது. கடலோர மாவட்டங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிய காருக்குள் இருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. சிட்னி அருகேயுள்ள போன்டி கடற்கரை பகுதியில் மேலும் ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டது. (இ-10)

# யூதர்களைக் காப்பாற்றிய சுவீடன் பெண்மணி புனிதராக அறிவிப்பு



இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் யூத குடும்பங்களை காப்பாற்றிய பெண் மணி ஒருவர் சுவீடன் நாட்டின் முதல் முறையாக புனிதராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

600 வருடங்களில் சுவீடன் நாட்டின் முதல் துறவியும் இவராவார். எலிசபெத் ஹிசல்ப்ளாட் என்னும் இவர் ரோமன் கத்தோலிக்க கான்வெண்டின் தலைவியாக இருந்தார், அங்குதான் பல யூதர்களை மறைத்து வைத்து அவர்களை காப்பாற்றினார் இவர்.

அதேபோல் 17 ஆம் நூற்றாண்டில் ஏழைகள் மருத்துவ வசதி மற்றும் இருப்பிடங்களை பெறுவதற்கு உதவிய ஸ்டானிஸ்லாஸ் பப்சின்ஸ்கி என்ற போலந்து நாட்டை சேர்ந்தவருக்கும் துறவி பட்டம் வழங்கியுள்ளார் போப் பிரான்ஸிஸ்.

இவர் கன்னி மாதாவின் வழிபாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆண்களுக்கான முதல் மதப் பிரிவை நிறுவியவராவார். (இ-10)

# காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த போராடும் அமெ. படையினர்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தின், கலபாஸஸ் பகுதியில் தொடரும் காட்டுத் தீயினை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையில், குறித்த பகுதியில் வசிக்கும் மக்களை மீட்புக்குழுவினர் வேறு இடங்களுக்கு நகர்த்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், குறித்த காட்டுத் தீயானது, லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தின் பல் வேறு பகுதிகளுக்கும் பரவி வருவதாகவும் தீயணைப்பு வீரர்கள் தொடர்ச்சியாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர போராடி வருவதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கலபாஸஸ் பிரதேசத்தில் காட்டுத் தீ பரவும் பகுதிக்கு மிக அருகில் ஒரு பாடசாலை இருப்பதாகவும், எவ்வாறான போதும், காட்டுத்தீயினால் பாடசாலை கட்டடங்கள் தீக்கிரையாகாத வகையில், தீயணைப்பு வாகனங்களுடன் குறித்த பகுதியில் தீயணைப்பு வீரர்கள் தொடர்ச்சியாக போராடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத சூழ்நிலையில், சில வீடுகள் தீயினால் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் சேத மதிப்பீடுகள் குறித்து இதுவரை கணிப்பிடப்படவில்லை என்றும், எவ்வாறான போதும், எத்தனை மக்கள் அந்த பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பிலும் இதுவரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)



# சிறுவர் அரங்கம்

1453

# புத்திசாலி பூனை பிரபு

முன்னொரு காலத்தில் விவசாயி ஒருவர் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை. இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம், என்று நினைத்தார் அவர். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தார்.

அந்த காட்டில் பூனையே கிடையாது. அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த் தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது.

"நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.

அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்.

நல்ல மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன், ஒரு பிரபுவை கல்யாணம் செய்து கொண்ட பெருமை எனக்கு கிடைக்கும்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும் பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய்.

பன்றி இதைக் கரடியிடம் சொன்னது. முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின் மீது உனக்கு ஆசை இலலையா?" என்று கேட்டது முயல்.

"எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.

எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருட்கள் பரிமாறப் பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது.



"எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி.

"எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய்.

"ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது. வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள் பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி.

இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல்

"அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி.

பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன.

பலவிதமான உணவுப் பொருட்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. 'மியாவ், மியாவ்' என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

(தொடரும்)

## 07 06.2016 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1099 - முதலாவது சிலுவைப் போர்: ஜெருசலேம் மீதான தாக்குதல் ஆரம்பமானது.
- 1494 - ஸ்பெயினும் போர்த்துக்கல்லும் தாம் கண்டுபிடித்த புதிய உலகத்தைத் தமக்கிடையே பகிர்ந்து கொள்ள உடன்பாட்டை எட்டினர்.
- 1654 - பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1692 - ஜமெய்க்காவில் மூன்றே நிமிடங்கள் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1600 பேர் கொல்லப்பட்டனர்.
- 1832 - கனடாவில் கியூபெக்கில் ஐரிய குடியேறிகளால் கொண்டுவரப்பட்ட கொள்ளை நோய் காரணமாக 6 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 1863 - மெக்சிக்கோ நகரம் பிரெஞ்சுப் படையினரால் கைப்பற்றப்பட்டது.
- 1893 - மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1905 - நோர்வே சுவீடனுடனான தொடர்புகளைத் துண்டித்தது.
- 1917 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தில் மெசைன் என்ற இடத்தில் 10,000 ஜேர்மனியப் படையினர் கொல்லப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டையில் 23 கனேடிய போர்க்கைதிகளை நாசிப் படைகள் கொன்றன.
- 1967 - இஸ்ரேலியப் படைகள் ஜெருசலேம் நகரினுள் நுழைந்தனர்.
- 1981 - இஸ்ரேலிய வானூர்திகள் ஈராக்கின் ஒசிராக் அணுக்கரு உலை மீது குண்டு வீசித் தாக்கி அழித்தன.
- 1989 - சுரினாமில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 168 பேர் கொல்லப்பட்டனர்.
- 1991 - பிலிப்பைன்சில் பினடுபோ எரிமலை வெடித்து 7 கிலோ மீற்றர் உயாரத்துக்கு அதன் தூசிகள் பறந்தன.
- 2000 - கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அமைச்சர் சி.வி.குணரத்ன மற்றும் தெகிவளை மாநகர உதவி மேயர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
- 2006 - மட்டக்களப்பு மாவட்டத்தில் நெடுங்கல் கிராமத்தில் இடம்பெற்ற கண்ணிவெடியில் சிக்கி 6 மாதக் குழந்தை உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

பிறப்புகள்

- 1974 - மகேஷ் பூபதி, இந்திய டென்னிஸ் ஆட்டக் காரர்
- 1975 - ஏலன் ஐவர்சன், அமெரிக்காவின் கூடைப் பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1906 - பொன்னம்பலம் குமாரசுவாமி, இலங்கை யின் சட்டசபை உறுப்பினர் (பி. 1849)
- 1964 - ஆறுமுகம் ஆச்சாரியார், யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசிரியர் (பி. 1890)

# பொன்னம்பலம் குமாரசுவாமி

முதலியார் பொன்னம்பலம் குமாரசுவாமி என்பவர் இலங்கைத் தமிழ் வழக்கறிஞரும் இலங்கை சட்டவாக்கப் பேரவை உறுப்பினரும் ஆவார்.

1849 டிசெம்பர் 7 இல் பிறந்த இவர் யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாயைச் சேர்ந்த கேட் முதலியார் அ.பொன்னம்பலம் என்பவருக்குப் பிறந்தார். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோர் இவரது சகோதரர்கள் ஆவர்.

குமாரசுவாமி கொழும்பு றோயல் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் கல்வி கற்றார்.

தனது பட்டப் படிப்பை முடித்துக் கொண்ட குமாரசுவாமி வழக்கறிஞர் தொழிலில் இணைந்து கொண்டார்.

கொழும்பு மாநகர சபையில் ஜனவரி 1873 முதல் ஒக்டோபர் 1879 வரையும், பின்னர் நவம்பர் 1885 முதல் டிசெம்பர் 1889 வரையும் உறுப்பினராகப் பதவியில் இருந்தார். 1893 இல் இவர் இலங்கை சட்டவாக்கப் பேரவையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரபூர்வமற்ற உறுப்பினராக சேர் பொன். இராமநாதனிற்குப் பதிலாக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவராக இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தார். கொழும்பு கொம்பனித் தெருவில் முருகன் கோவில் ஒன்றையும் நிறுவினார்.

# முகாம் வெடிவிபத்துக்கு நாசவேலை காரணமா?

## அமைச்சர் சாகல சந்தேகம்

(கொழும்பு)

**கொஸ்கம - சலாவ இராணுவ முகாமில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வெடி விபத்துக்கு, நாசவேலை காரணமாக இருக்கக் கூடும் என்று, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இரவு . சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்த பின்னர். கருத்து வெளியிட்ட அவர்.

சலாவ இராணுவ முகாமின் இரண்டு ஆயுதக் கிடங்குகளில் தீ வேகமாகப் பரவியுள்ளது. அதன் அருகே தீயணைப்பு வாகனங்களால் செல்ல முடியாதிருந்ததால். தீ பரவுவதைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருந்தது.



இதனால் நாம் உயிர்களைப் பாதுகாக்கவே முன்னுரிமை கொடுத்தோம். அதற்குப் பின்னரே எப்படி விபத்து ஏற்பட்டது. என்ன நடந்தது என்று ஆராய்வோம்.

நான் அதிகாரிகளுடன் பேசிய போது. ஆறு கி.மீ சுற்றளவுள்ள பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றுவதற்கு அவசியம் இல்லை என்று தெரிவித்தனர். வெடிப்புச் சிதறல்கள் ஒரு கி.மீ சுற்றளவுள்ள பகுதிகளில் தான் விழும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதனால். 2 கி.மீ சுற்றளவுள்ள பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றால் போதுமானது என்றும் தெரிவித்தனர்.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கான காரணம் தொடர்பாக இப்போது எதுவும் கூற முடியாது. ஆனால் இதற்கு நாசவேலை காரணமாக இருந்திருக்கலாம். அதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது.

காரணத்தைக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளேன்." எனறு தெரிவித்துள்ளார். இ-10)

# அரசாங்கத்தை சீர்குலைக்கும் மகிந்தவின் சதியே எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

## நிதியமைச்சர் ரவி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினதும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் தேசிய அரசாங்கத்தை சீர்குலைக்கும் மகிந்தவின் எண்ணமே எனக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எனவே நாளை 8 ஆம் திகதி எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒற்றுமை வெளிப்படுத்தப்படும் தினமாகும என்றும் அவர் தெரிவித்தார்.

நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கேட்ட போதே நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக நிதியமைச்சர் மேலும் கூறுகையில்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து இலங்கை வரலாற்றில் முதன்முறையாக இணக்கப்பாட்டுடன் தேசிய அரசை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் கடந்தகால ஆட்சியில் ஊழல் மோசடிகள் மலிந்து காணப்பட்டன. அதிக வட்டிக்கு கடன் வாங்கியது மட்டுமல்லாமல் வங்கி கடன்களின் தொகை எவ்வளவு என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை.

தோண்டத் தோண்ட பூதம் கிளம்புவது போன்று எண்ணிலடங்காத கடன்களை வாங்கி நாட்டையும். மக்களையும் கடனாளிகளாக தள்ளிவிட்டு பொருளாதாரத்தையும் நாசப்படுத்திவிட்டே சென்றுள்ளார்.

இன்று இவற்றிக்கெல்லாம் நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அனைத்து சவால்களையும் சமாளித்துக்கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ஷ இலங்கையை தனிமைப்படுத்தியிருந்தார். இன்று சர்வதேச நாடுகள் எமக்கு உதவ முன்வந்துள்ளன. முதலீடுகளை செய்யவும் தயாராகவுள்ளன.

ஜனாதிபதி. பிரதமருக்கு வெளிநாடுகளில் அழைப்பு விடுக்கின்றனர். இதன்போது இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பில் பாராட்டப்படுகின்றது.

எனவே கடந்த ஆட்சியாளர்களைப் போன்று நாம் வீண் ஆடம்பரச் செலவுகளையோ. பிரசாரங்களையோ முன்னெடுக்கவில்லை.

ராஜபக்ஷவின் பாவங்கள் எமது தலைமேல் சுமத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில்தான் எமது திட்டங்களை பொறுத்துக் கொள்ள முடியாத மகிந்த ராஜபக்ஷ எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை வித்திட்டுள்ளார்.

இது தேசிய அரசை சீர்குலைக்கும் சதியாகும்.

எனவே நாளை 8 ஆம் திகதி எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையின் வெளிப்பாட்டை வெளிப்படுத்துவர் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.(இ-10)

# தேயிலையுடன் கலக்கப்படும் நச்சுப்பொருட்களால் அச்சம்

தேயிலை கழிவுகளுடன் பொற்றாசியம் பரமங்கனைட். கொன்டிஸ் மற்றும் ப்பசல்பெட் என்பவற்றை கலந்து மோசடி வியாபாரிகள் விற்பனை செய்வது புதிய பரிசோதனைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பு நகரின் சுவை ஆய்வாளர் ஆர்.எம்.ஜி.பீ.ராஜநாயக்க தெரிவிக்கையில் தேயிலை கழிவிலிருந்து ஈ-கோலாய் பற்றீரியா கிடை க்கப்பெற்று ள்ளது.

குறித்த தேயிலை கழிவு கடத்தல்களானது வியாபார நிலையங்களில் தேநீர் தயாரிப்போர் மற்றும் தேயிலையை எடை போடுவோர் என்பவர்களின் மூலமே அதிகமாக இடம்பெறுகின்றன என அவர தெரிவித்தார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### நன்றியை மறுக்கலாமா?

நன்றியை மறுக்கலாமா? இது என்ன புதுச் சிந்தனை என்று உங்கள் மனம் கேட்கிறதா?

இந்தப் புதுச் சிந்தனை ஒரு பயனுள்ள சிந்தனையே.

நாம் ஓர் உதவியைச் செய்கிறோம். பலனடைந்தவர்கள் மனமகிழ்ந்து நன்றி சொல்கிறார்கள்.(அபூர்வம் என்கிறீர்களா?)

சேச்சே இதுக்கென்னத்துக்குங்க நன்றியெல்லாம்?

இதைப் பாருங்க , நமக்குள்ள இந்தப் பார்மாலிட்டியெல்லாம் வேண்டாம்.

என்னத்தைப் பெரிசா செஞ்சுட்டேன்னு நன்றி சொல்றீங்க?உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்துச்சு. இதில் எனக்கு ஏன் நன்றி?

(ரொம்ப வேண்டியவர்களிடம்) சரிசரி போதும், வாயை மூடிக்கொள் என்றெல்லாம் அவர்களது நன்றியை மறுப்பது விவேகமல்ல, இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை.

நாம் மேற்கூறிய படியெல்லாம் பெயருக்குச் சொல்லி வைப்போமே தவிர, உண்மையில் அந்த நன்றியை நம் மனம் பெரும்பாலும் விரும்பத்தான் செய்யும். அப்படி இருக்கையில் உதட்டு ஜாலம் செய்வானேன்?

இரண்டாவதாக , உதவி பெற்றவர்களுள் உண்மையானவர்களுக்கு நன்றி கூறுவதிலும் அதை நாம் ஏற்றுக் கொள்வதிலும் பெரிதும் திருப்தி ஏற்படுகிறது. அந்தத் திருப்தியை நாம் கெடுப்பானேன்?

காதல் பரிசு தரும் கரங்களை முறிப்பது மாதிரி–

அன்போடு மலர்ச்செண்டு தரும் மழலையும் கையை தட்டி விடுவது மாதிரி.

முகம் மலர்ந்து கூறுகின்ற மொழிகளை முகத்திலடிப்பது போல் மறுப்பதில் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

நாம் நன்றி சொன்னதை ஏற்றுக் கொண்டால் அதில், அவருக்குப் பூரண திருப்தி என்று உதவி பெற்ற மகிழ்ச்சியைத் தந்ததோடு , அவர்களது நன்றியை நாம் ஏற்ற மகிழ்ச்சியையும் அவர்களுக்குத் தரலாம்.

அப்போதுதான் ஓர் உதவி பூரணத்துவம் பெற்றதாக ஆகும்.

நன்றியை ஏற்றுக் கொள்வது எப்படி? புன்னகை, தலையாட்டல் ஆகியவற்றோடு ரைட், ஓகே என்பது போன்ற வார்த்தைகள் இங்கு பயன்படும்.

மேலை நாடுகளிலெல்லாம் இப்போது நன்றி சொன்னால் , டோன்ட்மென்ஷன். நன்றி என்பதை உச்சரிக்காதே என்று சொல்வதை விட்டுவிட்டு வெல்கம் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இது ஒரு நல்ல பண்பு.

நன்றி சொல்பவர்களை முழுவதுமாகப் பேசிவிட வேண்டும். இடை மறித்து, போதும் போதும் என்று அவர்கள் வாயைச் சட்டெனத் தைப்பது அழகல்ல.

நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையில் மற்றவர்கள் தரும் பொருட்களை வாங்க மறுப்பது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

ஆனால் அவர்களது வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளமாட்டேன் என அடம்பிடிப்பது சரியல்ல!

**லேனா தமிழ்வாணன்**

## 'மக்களே சூழலையும் கவனியுங்கள்' வலி.மேற்கில் வீதி நாடகங்கள்

உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டுயாழ்.வலி.மேற்குபிரதேசசபைக் குட்பட்ட10இடங்களில்மக்களேசூழலையும் கவனியுங்கள் என்றவீதிநாடகங்கள்நேற்றையதினம்தொடக்கம்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவலிகாமம்மேற்கு பிரதேசசபைச்செயலாளர்திருமதிகுணவதிசண்முகலிங்கம்அறிவித்துள்ளார்.

மானிப்பாய்இந்துக்கல்லூரிமாணவர்களின் பங்களிப்புடனும் வேள்ட்விசன் நிறுவன அனுசரணையுடனும்மேற்படிசுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன.

கீழ்வரும்திகதிகளில்பின் வரும் இடங்களில் வீதி நாடகங்கள் இடம் பெறவுள்ளன.

இன்று7ஆம்திகதிமாலை4.30 மணி தொடக்கம் 5 மணி வரை பிள்ளையார் கோவிலடி, மாலை 5 மணி தொடக்கம் 5.30 மணி வரை கண்ணன் சனசமூக நிலைய முன்றல், நாளை 8 ஆம் திகதி மாலை 4.30 மணி தொடக்கம் 5 மணி வரை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில், மாலை 5 மணி தொடக்கம் 5.30 மணி வரை யாழ்ப்பாணக் கல்லூரி/ சந்தி, உப அலுவலகம் வட்டுக்கோட்டை. நாளை மறுதினம் 9 ஆம் திகதி மாலை 4.30 தொடக்கம் 5 மணி வரை சங்கானை பேருந்து தரிப்பு நிலையம். மாலை 5 மணி தொடக் கம் 5.30 மணி வரை சங்கானை உப அலுவலக முன்றல்.

தொடர்ந்து 10 ஆம் திகதி மாலை 4.30 மணி தொடக்கம் 5மணி வரை ஆலடி சந்தி, மாலை 5 மணி தொடக்கம் 5.30 மணி வரை அராலி உப அலுவலக முன்றல். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-06.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.66 | 148.32 |
| பிரிட்டன் | பவுண்ட் | 207.38 | 214.57 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 163.10 | 169.47 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.08 | 153.14 |
| கனடா | டொலர் | 110.81 | 115.35 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.91 | 109.78 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.81 | 109.82 |
| இந்தியா | ரூபா | 2.1780 | -- |
| சீனா | யுவான் | 22.230 | -- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 387.0279 |
| குவைத் | டினார் | 484.6397 |
| ஓமான் | ரியால் | 379.0014 |
| கட்டார் | ரியால் | 40.0871 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.9102 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.7280 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 220 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 120 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 700 | 400 | 700 | 700 | 500 | 800 |
| தக்காளி | 200 | 200 | 170 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 50 | 60 | 60 | 80 |
| கோவா | 160 | 180 | 140 | 180 | 160 | 200 |
| கரட் | 200 | 150 | 150 | 160-300 | — | 320 |
| பூசணி | 60 | 40 | 50 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 120 | 100 | 100 | 120 | 160 |
| வாழைக்காய் | 70 | 50 | 50 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 150 | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 80 | 70 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 320 | 140 | 170 | 250 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 220 | 120 | 100 | 150 | 140 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 90 | 140 | 100 | 160 |
| பயற்றங்காய் | 300 | 150 | 150 | 240 | 240 | 240 |
| லீக்ஸ் | 180 | 250 | 180 | 200 | 220 | 240 |
| பீற்றூட் | 140 | 350 | 110 | 250 | 100 | 240 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 220 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 200 | 200 | 140 | 300 |
| போஞ்சி | 300 | 200 | 200 | 240 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 220 | 180 | 180 | 200 | 240 | 240 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 100 | 50 | 50 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 15-25 | 40 | 30 | 20-35 |
| இராசவள்ளி | 150 | 150 | 110 | 200 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | — | 220 | — | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 15 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | — | — | 80 | 100 | 100 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 197

## 13 விமானங்கள் தீப்பிடித்து எரிந்தன

சம்மதிக்க வேண்டும்.

நாங்கள் போரை நிறுத்த விரும்புகின்றோம்.எந்த நேரத்திலும் போர் நிறுத்தம் செய்ய தயாராக இருக்கிறோம்.

ஆனால் ஒரு நிபந்தனை. விடுதலைப்புலிகள் முதலில் பேச்சு வார்த்தைக்கு சம்மதிக்க வேண்டும். அதற்குப் பிறகே போர் நிறுத்தம் செய்வோம்.

இவ்வாறு சந்திரிக்கா கூறினார்.

**ஒரு மாதம் நீடிப்பு**

இதற்கிடையே விடுதலைப் புலிகள் அறிவித்து இருந்த போர் நிறுத்தம் 24.01.2001 அன்று இரவுடன் முடிவுக்கு வந்தது.

அதை மேலும் ஒரு மாதம் நீடிப்பதாக அவர்கள் அறிவித்தனர்.

வடக்கு இலங்கை பகுதியில் வன்னியில் உள்ள விடுதலைப்புலிகளின் தலைமை அலுவலகம் இந்த அறிவிப்பை வெளியிட்டது. அதில் மேலும் கூறியிருந்ததாவது,

நோர்வே அரசு மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிக்கு உதவும் வகையிலும் இலங்கையில் நீடித்து வரும் அரசியல் சிக்கலைத் தீர்க்கும் வகையிலும் உண்மையான உணர்வுடன் போர் நிறுத்தத்தை ஒரு மாதம் நீடித்து இருக்கிறோம்.

எங்களது போர் நிறுத்தத்தை இலங்கை அரசு நிராகரித்து இருப்பது எங்களுக்கு வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

**தாக்குதல்**

எங்களது நல்லெண்ணத்தை இலங்கை அரசு மதிக்கத் தவறியதுடன் போர் நிறுத்த காலங்களில் பெரிய அளவிலான தாக்குதலையும் நடத்தி வருகிறது.

வன்முறை மூலமும் யுத்தத்தின் மூலமும் பிரச்சினையை அணுகும் நிலையை சிங்கள இராணுவம் உலகுக்கு விளக்கி இருக்கிறது.

எனவே இலங்கையில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு சமரசப் பேச்சு தொடங்க இலங்கை அரசை உலக நாடுகள் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

**விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 விமானங்கள் தீப்பிடித்து எரிந்தன**

கொழும்பு விமான நிலையத்தில் விடுதலைப்புலிகள் அதிரடியாகப் புகுந்து குண்டு வீசித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 13 விமானங்கள் தீப்பிடித்து எரிந்தன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி கொழும்பு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த குட்டி மணி, ஜெகன் உட்பட தமிழ் போராளிகள் பலர் சிங்கள வெறியர்களால் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து இலங்கையில் இனக் கலவரம் வெடித்தது.

தனி ஈழம் கேட்டு விடுதலைப் புலிகள் போரில் குதித்தனர். அன்று முதல் இலங்கை நாடு கலவர பூமியாக மாறியது.



**கறுப்பு ஜீலை**

தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜீலை மாதத்தை கறுப்பு ஜீலையாக விடுதலைப்புலிகள் கடைப் பிடித்தனர்.

இதையொட்டி ஜீலை மாதத்தில் அவர்கள் இலங்கை இராணுவத்துக்கு எதிராக அதிரடித் தாக்குதல் நடத்துவதை வழக்கமாகக் கொண்டனர்.

**தகுந்த பாடம்**

இலங்கை விமானப்படை விமானங்களும் ஹெலிகொப்டர்களும் யாழ்ப்பாணப் பகுதியில் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருவதால் கறுப்பு ஜீலையை முன்னிட்டு விமானப்படைக்குத் தகுந்த பாடம் கற்பிக்க விடுதலைப் புலிகள் திட்டம் வகுத்தனர்.

இதை நிறைவேற்றும் வகையில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் 24.07.2001 அன்று அதிகாலையில் கொழும்பில் உள்ள சர்வதேச விமான நிலையம் மற்றும் இராணுவ விமானத் தளத்துக்குள் புகுந்து அங்கிருந்த விமானங்களை குண்டு வீசி அழித்தனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் பற்றிய முழு விபரம் வருமாறு,

**விமான நிலையம்**

சிறிய தீவு நாடான இலங்கையில் ஒரேஒரு சர்வதேச விமான நிலையம் மட்டுமே உள்ளது. தலைநகர் கொழும்பில் இருந்து 18 கிலோ மீற்றர் தொலைவில் பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையம் பேரிடப்பட்டுள்ள இதற்கு அருகே இலங்கை இராணுவத்தின் விமானப் படைத் தளமும் உள்ளது. இந்தப் பகுதி முழுவதும் இராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்பில் சீழுள்ளது.

**அதிகாலையில்**

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவினர் 21 பேர் அதிகாலை 4 மணிக்கு கொழும்பு நிலையத்திற்குள் அதிரடியாகப் புகுந்தனர்.



(தொடரும்)

# தாமதமானாலும் தீர்வு நிச்சயம்

# உண்மைகளை கண்டறியும் பொறிமுறையின் ஆரம்பகட்ட நகர்வுகளில் அரசுக்கு வெற்றி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் தாமதப்படுத்துவதாக கூறுவதோ அல்லது உண் மைகளைக் கண்டறியும் பொறிமுறைகளில் அரசாங்கம் இழுத்தடிப்புகளை செய்கின்றது என்று கூறப்படுவதையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மைகளைக் கண்டறியும் பொறி முறையின் ஆரம்பகட்ட நகர்வுகளில் வெற்றி கண்டுள்ளோம். எனினும் எந்தத் தீர்வையும் உடனடியாக பெற்றுவிட முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



போர்க்குற்ற விசாரணைகள் ஸ்தம்பிதம் குறித்து ஐ.நா. விசேட அறிக்கையாளரிடம் சுட்டிக்காட்டுவதாக சிவில்சமூகம் தெரிவித்துள்ள நிலையில் அது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விபரித்த போதே அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

நல்லாட்சி அரசாங்கம் சரியான வகையில் தமது செயற்பாடுகளை கையாண்டு வருகின்றது. போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் தாமதப்படுத்தவில்லை.

யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் முன்னைய அரசாங்கம் 6 ஆண்டுகள் ஆட்சி செய்தது. தீர்வு தொடர்பில் அப்போது முன்னெடுத்த நகர்வுகள் தொடர்பிலும் இந்த ஒரு ஆண்டு காலத்தில் நாம் எடுத்த நகர்வுகளிலும் பாரிய வித்தியாசங்கள் உள்ளன.

எனினும் தீர்வும் மிக விரைவில் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தான் ஏமாற்றத்தை கொடுக்கின்றது.

எந்தத் தீர்வையும் உடனடியாக பெற்றுவிட முடியாது. எவ்வாறு இருப்பினும் எமது ஆட்சியில் பிரச்சினைகளுக்கான தீர்வு உறுதிப்படுத்தப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படுவதில் எந்த மாற்றமும் இல்லை. ஆட்சி மாற்றத்தின் போது நாம் முன்வைத்த முக்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மற்றும் பிரதமர் நிறைவேற்றுவர்.

அதேபோல் சிறுபான்மை மக்களின் நலன் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது.

இப்போதும் நாம் தீர்வுத் திட்டம் தொடர்பில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தீர்வு காணலாம் என நம்புகின்றோம்.

நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு எமது ஆட்சியில் தீர்வு நிச்சயம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இப்போதே வடக்கில் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அம் மக்களின் காணிகள் மீளவும் அவர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன.

காணாமற் போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பில் ஆணைக்குழு மூலமாக ஆராயப்பட்டு வருகின்றது. ஆகவே விரைவில் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும். நாம் மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு முகம் கொடுக்க வேண்டியகட்டாயம் உள்ளது.

எனினும் கடந்த காலத்தைப் போல எந்தச் சிக்கலும் இம்முறை இருக்காது என அரசாங்கம் நம்புகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 743

Search for people, places and things | Nagendram | Home

ஜனாத்தன்




நிஷாந்தன்



தனு




நிஷாந்தன்

திருடன் ஒரு வீட்டிற்குள் நுழையும்போது அவன் கால் பட்டுச் சத்தம் உண்டாகிறது.

வீட்டுக்காரர் : யாரு?

திருடன் : மியாவ்!



வீட்டுக்காரர் : யாரது?

திருடன் : மியாவ்!

வீட்டுக்காரர் : அட யாரது?

திருடன் : அட, காது கேக்கலியா? பூனைடா டேய்!

ரட்தி



சந்துரு



**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# ஆரிய குளத்தில் மீன் இறப்பு

யாழ். மாநகரசபை ஆணையாளரிடமிருந்து யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைக்கு 11.03.2016 திகதியிட்ட கடிதத்தில் மீன் இறத்தல் தொடர்பான பௌதீகக் காரணியை அறிந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான ஆலோசனையை தந்துதவுமாறு கேட்கப்பட்டிருந்தது. அதற்கமைய 14,18ஆம் திகதிகளில் ஆரியகுளத்தின் ஒன்பது இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆராயப்பட்டன. பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் "ஆரியகுளத்தின் தற்போதைய நிலை பற்றிய அறிக்கை (18th MARCH, 2016) மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்" என்ற தலைப்பில் யாழ். மாநகர சபை ஆணையாளரிற்கு 23 ஆம் திகதியில் ஓர் கடிதம் விலங்கியற்றுறைத் தலைவரூடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் எழுதப்பட்டவை மீளவும் விரிவாக்கப்பட்டு மக்களின் பார்வைக்கு இங்கு தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 1:ஆரியகுளத்தில் 18.03.2016 அன்று அளக்கப்பட்ட பௌதீக அளவுருக்கள் | | |
|---|---|---|
| 01 | குளத்தின் அண்ணளவான பரப்பளவு | 11,914.37 $m^2$ |
| 02 | சராசரி வளிமண்டல வெப்பநிலை (8.00-9.00am) | $33.0^0$ C |
| 03 | சராசரி நீர்மேற்பரப்பு வெப்பநிலை | $29.2^0$ C |
| 04 | சராசரி ஒளி ஊடுருவும் ஆழம் | 27.3 cm |
| 05 | நீர்மேற்பரப்பிலிருந்து குளத்தின் சராசரி ஆழம் | 150.3 cm |
| 06 | ஒளி ஊடுருவும் குளத்தின் சராசரி கனவளவு<br>ஆகவே ஒளி ஊடுருவும் குளத்தின் பகுதி | 3256.20 $m^3$<br>18% |
| 07 | குளத்தின் இருண்டபகுதியின் சராசரி கனவளவு<br>ஆகவே குளத்தின் இருண்டபகுதி | 11076.79 $m^3$<br>82% |

## அறிமுகம்

யாழ்ப்பாணத்திலுள்ள வடிகால் அமைப்புக்கள் பல நீரேந்து குளங்களை உள்ளடக்கித் தொழிற்பட்டு இறுதியில் மிகுதியான நீரை யாழ்ப்பாணக் கடநீரேரியில் விடுவிக்கின்றன.

ஆரியகுளமானது அவ்வாறான வடிகால் அமைப்பிடையே அமைந்திருக்கும் ஓர் குளமாகும்.

## மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

1. 14, 18ஆம் திகதிகளில் ஆரியகுளத்தின் பெரும்பாலான பகுதியானது தாமரைக் கொடியாலும் தென் மேற்குப் பகுதியானது மற்றைய நீர் தாவரங்களான duck weed, water spinach, pond grass போன்றவற்றாலும் மூடப்பட்டிருந்தது.

2. எனினும் கிழக்கெல்லையை ஒட்டி வடக்குத் தெற்காக ஓர் நீண்ட மெல்லிய நீர் பரப்பு தாவரங்களற்று காணப்பட்டது. இங்கு நீர் தெளிவற்றும் கடும் பச்சை நிறமாகவும் காணப்பட்டது.

3. குளத்தில் வீசி எறியப்பட்ட குப்பைகள், கூழாங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் பியர் போத்தல்கள் போன்றவற்றை ஓர் சிறிய படகில் 3 பணியாளர்கள் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

4. குளத்தின் மேற்பரப்பிலும் நீரிற்குள்ளும் பலவிதமான நீர்ப்பறவைகள், நீர்ப்பாம்புகள், நீர்ப்பூச்சிகள், தரைப்பூச்சிகள் என்பன காணப்பட்டதுடன் சிறிய மீன் குஞ்சுக் கூட்டம் ஒன்றும் நீர்ப் பரப்பிற்கு சற்றுக்கீழாக வருவதும் மறைவதுமாக இருந்தன.

இதைவிட குளத்திலிருந்து எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளிலிருந்து பின்வரும் பௌதீக இரசாயன மற்றும் உயிரியல் காரணிகள் பரிசோதிக்கப்பட்டு அளவீடுகள் பெறப்பட்டன. அவை கீழே அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

| அட்டவணை-2 ஆரியகுளத்தில் 18.03.2016 அன்று எடுக்கப்பட்ட நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுப் பெறப்பட்ட அளவீடுகளுடன் இலங்கை மேற்பரப்பு நீரிற்குரிய நியம அளவீடுகள் ஒப்பிடப்பட்டுள்ளன | | | |
|---|---|---|---|
| | அளவுருக்கள் | பெறுமானம் (ஆரியகுளம்) | மேற்பரப்பு நீரிற்குரிய நியம அளவீடுகள் (இலங்கை) |
| 01 | pH | 9.56 | 6ஐ விடக் குறைவாய் இருத்தல் வேண்டும் |
| 02 | அமோனியா நைட்ரஜன்<br>நைட்றேற்று நைட்ரஜன் | 1.45 ppm<br>0.725 ppm | 0.5 ppm |
| 03 | பொஸ்பேற் பொஸ்பரஸ் | | 2.0 ppm |
| 04 | கரைந்துள்ள மொத்த திண்மங்களின் அளவு (TDS) | 698 mg/$l$ | 500 mg/$l$ ஐ விடக் குறைவாய் இருத்தல் வேண்டும் |
| 05 | கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு | 2.74 ppm | 5 ppm |
| 06 | மொத்த பக்றீரியாக்களின் எண்ணிக்கை | 1583 x 50 | 10 |
| 07 | மலக்கழிவு பற்றீரியாக்களின் எண்ணிக்கை | 283 x 50 | 0.00 |

## பிரச்சினை: மீன்களின் இறப்பு

விளக்கம்: இலங்கையிலுள்ள நீர்வாழ் உயிரங்கிகளின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளத் தேவைப்படும் கரைந்துள்ள ஒட்சிசன் மட்டம் 5ppm ஆகும் (பார்க்க அட்டவணை 2). இம்மட்டத்தை விட கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு குறைவடையும்போது விசேடமாக மீன்கள் அழுத்தத்திற்குள்ளாகின்றன. YSI, 2009 அறிக்கையின்படி மீன்கள் 1-2 ppm அளவிற்கு குறைவான ஒட்சிசன் மட்டத்திற்கு சில மணித்தியாலங்கள் முகங்கொடுக்கப்பட்டால் பெருமளவில் இறக்கத் தொடங்கும்.



18ஆம் திகதி ஆரியகுளத்தின் சராசரியாகக் கரைந்திருந்த ஒட்சிசனின் அளவு 2.74ppm ஆகும்(அட்டவணை 2). பொதுவாக வெப்பநில்லை உயர்வடையும் போது வளிமண்டலத்திலிருந்து நீரிற்குக் கரையும் ஒட்சிசனின் வீதம் குறைவடையும். பங்குனி மாதத்தின் முற்பகுதியில் நிலவிய அதிகூடிய வெப்பநிலை ஒட்சிசன் கரையும் வீதத்தைக் குறைத்திருக்கலாம்.

மேலும் நீரை மூடி வளர்ந்திருந்த நீர்த்தாவரங்கள் நீரிற்கும் காற்றிற்கும் ஏற்படும் தொடர்பை முற்றாகத் துண்டித்திருந்தன. இதைவிட குளத்தில் வீசப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பைகள், போத்தல்கள் போன்றனவும் தொடுபரப்பை முற்றாகத் தடுத்ததுடன் நீர் வெப்பநிலையை உயர்த்துவதிலும் பங்களிப்பைச் செய்திருந்தன.

இதனடிப்படையில் பார்க்கும் போது பங்குனி மாதம் 11ஆம் திகதி மற்றும் அதற்கு முந்தைய தினங்களில் குளத்து நீரில் காண்பட்ட ஒட்சிசனுடைய அளவானது அங்குள்ள மீன்களின் சுவாசத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய ஆகக் குறைந்த ஒட்சிசன் மட்டத்தை விடக் குறைந்திருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகின்றது.

ஆகவே மீன்களின் இறப்பிற்கு இது ஒரு முக்கிய காரணியாகத் தொழிற்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

## பிரச்சினைக்கான காரணம்-சடுதியான நீர் தாவர வளர்ச்சி

விளக்கம்: இவ்வாறான தாவர வளர்ச்சியானது குளத்தில் அசாதாரணமாக அதிகரித்த தாதுப்பொருட்களால் ஏற்படுவதுண்டு. இந்த சடுதியான தாவர வளர்ச்சிக்கு 3 கனியுப்புக்களான நைதரன் (N), பொஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) என்பன அதிகளவில் கிடைப்பதே காரணமாகும். இம்மூன்று கனியுப்புக்களும் அருகிலுள்ள குடியிருப்புக்களின் மூலம் குளத்திற்குத் தாராளமாகக் கிடைக்கின்றன. எப்படியெனில் சமையல்றைக் கழிவுகளையும் சாம்பலையும் கொட்டும் போது பொட்டாசியம், பொஸ்பரஸ் என்பன சேர்க்கப்படும். இதைவிட அருகிலுள்ள வீட்டுமனைகளின் கழிவறைகள் குளத்தின் கரையோரமாகக் கட்டப்பட்டிருப்பதாலும், மலக்கழிவு குளத்தில் மிதப்பது அவதானிக்கப்பட்டதாலும், மலக்கழிவு பக்றீரியாக்கள் நியம அளவீட்டிலும் பார்க்க பலமடங்கு அதிகமாக இருப்பதாலும் (அட்டவணை 2) மலக்கழிவு குழாய்கள் குளத்திற்குள் நேரடியாகத் திறந்து விடப்பட்டிருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் எழுகின்றது.

நியம அளவிலும் பார்க்க அதிகரித்த அமோனியா நைதரசனின்அளவு 1.45 ppm இதனை மேலும் வலுவடையச் செய்கின்றது (அட்டவணை 2). ஆகவே இதன்மூலம் நைதரசன், பொஸ்பரஸ் என்பன குளத்தினுள் சேர வாய்ப்புண்டு.

அருகிலுள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர்களும் மலத்தொற்றுக்களும் குளத்தினுள் நேரடியாகக் கலக்கும்போது ஒருநிலையில் இவை அதிகரித்த செறிவில் காணப்படும். இது தாவர வளர்ச்சியில் சடுதியான அதிகரிப்பைக் காட்டும். இது "நீர் மலரல்" என அழைக்கப்படுகின்றது. இவ்வாறான அதிகரித்த உள்ளீடுகள் காரணமாக தாவர வளர்ச்சியைப் போன்று பிரிகையாக்கிகளும் திடீரென அதிகரிக்கும். பெரும்பாலான பிரிகையாக்கிகள் நீரிலுள்ள ஒட்சிசனைப் பயன்படுத்தியே சேதனப் பிரிகையாக்கலில் ஈடுபடும்.

ஆகவே நீரிலுள்ள ஒட்சிசனின் அளவு சடுதியாகக் குறைவடையும். ஏற்கனவே குளத்தின் 4/5 பங்கு இருளடைந்திருப்பதால் (அட்டவணை1) ஒளித் தொகுப்பின் மூலம் குளத்திற் குக் கிடைக்கும் ஒட்சிசனின் அளவும் தாழ் மட்டத்திலேயே இருந்திருக்கும்.

ஆகவே இதன்மூலம் பிரிகையாக்கலினால் ஏற்படுத்தப்பட்ட ஒட்சிசன் இழப்பு ஈடுசெய்யப்பட முடியாது போயிருந்திருக்கும். மொத்தத்தில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவானது மீன்களின் சுவாசத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய ஆகக் குறைந்த மட்டத்தை விடக் குறைவடைய ஏராளமான மீன்கள் இறக்கத் தொடங்கியுள் ளன.



## தீர்விற்கான பரிந்துரைகள்

ஆரிய குளமானது யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையில் இரு பிரதான வீதிகள் இணையும் இடத்தில் அமைந்திருக்கும் ஓர் குளமாகும்.

இது பலவிதமான உயிரங்கிகளிற்கு வாழிடத்தை வழங்கி ஓர் ரம்மியமான சூழலைத் தந் துள்ளது. இது தொடர்ந்து பேணப்படுவதற்கு குளத்தின் ஒட்சிசனின் அளவைப் பேணுதல் இன்றியமையாததாகும். இதற்கு பின்வரும் முறைகளைக் கையாளலாம்.

1. எப்போதும் குளத்தின் ஓர் பகுதியை (1/4 பகுதியையாவது) நீர் தாவரங்களற்ற பிரதேசமாக வைத்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

இவ்வாறு பராமரிப்பதன் மூலம் ஓர் பகுதி நீர்பரப்பானது வளிமண்டல ஒட்சிசனை உள்வாங்குவது உறுதிப்படுத்தப்படும்.

2. தாவரங்களின் அடர்த்தி சடுதியாக அதிகரித்தால் துரிதமாக செயற்பட்டு அவற்றை அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. செயற்கையான நீர் விசிறும் அமைப்பை குளத்தின் தகுந்த இடத்தில் பொருத்துதல். இது ஒட்சிசனின் கரைதிறனை துரிதப்படுத்தும்.

4. குளத்தை சூழ உயர்ந்த கம்பிவேலிகளை இணைப்பதன் மூலமும் கமரா இணைப்பதன் மூலமும் வெளிப்புறத்திலிருந்து கழிவுப்பொருட்கள் வீசப்படுதலைக் கட்டுப்படுத்த முடியும். அத்துடன் குளங்களை அசுத்தப்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல்.

5. காலத்திற்குக் காலம் குளத்தைத் தூர் வாருவது மிக அவசியமாகும்.

6. இதைவிட குளத்தின் சூழலை சுகாதாரமாகப் பேணுதல் அவசியமாகும். மலக்கழிவு பக்றீரியாக்கள் அமோனியா நைதரசன் என்பன நியம அளவீட்டிலும் பார்க்க பல மடங்கு அதிகமாக இருப்பது ஆரோக்கியமற்றதாகும்.

குளமும் சுற்றுவட்டாரத்திலுள்ள கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் என்பனவும் நிலத்திற்குக் கீழேயுள்ள நீர்மேடைகளால் இணைப்பைப் பெற்றிருக்கும். இவ்விணைப்புக்கள் மூலமாக மலக்கழிவு பக்றீரியாக்கள் மிக இலகுவாக அடுத்தடுத்த பகுதிகளிற்குப் பரவி வரும். இதற்கு வடிவமைக்கப்பட்ட ஈரநிலத் தொகுதியைக் (Constructed Wetland) குளத்தின் கழிவு நீர்கள் கலக்கும் கரைகளுடன் இணைத்தல்.

இதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீர் குளத்தினுள் செல்வது உறுதிப் படுத்தப்படும். (DOI:10.1007/s11356-014-3575-3).

மாநகரசபை இவற்றைக் கவனத்தில் கொண்டு குளத்திற்கருகிலுள்ள குப்பைகளை அகற்றிப் பாதையைச் செப்பனிட்டுத் தந்தால் மாலை வேளைகளை மகிழ்ச்சியாகக் கழிக்கும் இடமாக இதை மாற்ற முடியும்.

மாநகர சபையோடு மக்களும் பொறுப்புணர்ந்து செயற்பட்டால் ஆரிய குளமானது அழகாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. இல்லையேல் எதிர்காலத்தில் மீண்டுமொருமுறை மீன்கள் இறப்பது தவிர்க்க முடியாது

கலாநிதி அபிராமி சிவரூபன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.



யாழ். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவ வருடாந்த தேர்த்திருவிழா நேற்றைய தினம் நடைபெற்ற போது....

# பொருளாதாரத்தை சீர்ப்படுத்துவதற்கு ஜனாதிபதி , பிரதமரால் தான் முடியும்

## மேர்வின் சில்வா கூறுகின்றார்

(கொழும்பு)

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கொழும்பு நகர சபை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு, நேற்று முன்தினம் முன்னாள அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது உரையாற்றிய மேர்வின் சில்வா நாட்டின் பொருளாதாரத்தை சீர்ப்படுத்தக் கூடிய இருவர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தான்.

எனவே அவர்களால் முடியாது போனால் வேறு யாராலும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்ப்படுத்த முடியாது என்று கூறியுள்ளார்.

அத்துடன் கோத்தபாய பிரதி தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகை வாயிலாக அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

காரணம் வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கியவரே கோத்தா தான்.

எனவே அவருக்கு பிரதித் தலைவர் பதவியா? என அதிர் ச்சியடைந்தேன்.

மேலும் இந்த வெள்ளை வான் மூலம் எனக்கு தேவையானவர்கள் மூவரை தூக்கியதோடு, எனது மகனையும் கொண்டு சென்றார்கள்.

தாஜுடீனைப்போல எனது மகனுக்கும் நடந்திருக்கும். ஆனால் எனது மகன் திறமைசாலி என்பதால் அவர்களிடம் இருந்து தப்பி வந்துவிட்டான் என்றும் மேர்வின் சில்வா தெரிவித்தார். (இ-10)



# ரூபா 36 இலட்சம் பெறுமதியான வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு கடத்த முற்பட்ட வல்லப்பட்டையுடன் ஒருவர், நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக கடத்த முற்பட்ட இந்த வல்லப்பட்டையின் மதிப்பு சுமார் 36 இலட்சம் ரூபாய் ஆகும்.

குறித்த நபரின் நடத்தை தொடர்பில் சந்தேகமடைந்த விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி, அது தொடர்பில் விமான நிலைய பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

அதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது தனித்தனியாக பிரிக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 கிலோகிராம் வல்லப்பட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட வல்லப்பட்டை அரச உடைமை ஆக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதானவர்கள்

# சித்திரவதை குறித்து முறையிட்டால்

# உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## மனிதவுரிமை ஆணைக்குழு அறிவிப்பு

பயங்கரவாத விசாரணைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டாலோ அல்லது கைது செய்யப்பட்டவர்களை பார்வையிடுவதில் ஏதும் தடைகள் ஏற்படுத்தப்பட்டாலோ உடனடியாக மனிதவுரிமை ஆணைக்குழுவில முறையிட முடியும் எனவும், முறைப்பாட்டினை பதிவு செயவதன் மூலமே தம்மால் உரிய நடவடிக்கை எடுக்க முடியுமெனவும்மனிதவுரிமைஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்கள் தற்போது கொழும்பு நாலாம் மாடியிலும், பூசாவிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு தடுத்து வைகைகப்பட்டவர்களை பார்வையிடுவதில் பல்வேறு தடைகள் காணப்படுவதாக உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலும், மேலும் கைதாகியவர்கள் துன்புறுத்தப்படலாம் என அச்சம் தெரிவித்துள்ள நிலையிலும், இவை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளரிடம் நேற்றைய தினம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவடத்தில் கடந்த சில நாட்களாக விசாரணைகளின் நிமித்தமும், சாவகச்சேரி தற்கொலை அங்கி மீட்பு தொடர்பிலும் கைதுகள் இடம பெற்று வந்தன, இவர்கள் காலியில் பூசா முகாமிலும், அல்லது கொழும்பு நாலாம் மாடியிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களை பார்வையிடும் உரிமை அவர்களது உறவினர்களுக்கு உண்டு.

பயங்கரவாத விசாரணை பிரிவினர் குறித்த ஒரு நாளை உறவினர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அது அவர்களது உரிமைகளில் ஒன்றாகும். மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிட ஏதும் தடைகளை பயங்கரவாத விசாரணை பிரிவு ஏற்படுத்தினால் அது தொடர்பில் உடனடியாக முறைப்பாடு செய்யமுடியும்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் காலி பூசா முகாம் தொடர்பிலான முறைபபாடுகளை மாத்தளையில் உள்ள எமது அலுவலகம் மூலமாகவும், கொழும்பு நான்காம் மாடி தொடர்பான முறைப்பாடுகளை கொழும்பில் உள்ள எமது அலுவலகம் மூலமாகும் விசாரணை மேற்கொள்ள முடியும். யாழ்பபாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் எமது அலுவலகத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருபவர்கள் விசாரணைகளின் போது துன்புறுத்தப்பட்டால் அது தொடர்பில் எமக்கு முறைப்பாடு செய்து துன்புறுத்தல்களில் இருந்து உறவினர்களை காப்பாற்றி கொள்ள முடியும். மேலும் வடக்கில் கைது செய்யப்பட்ட அனைவரது தகவல்களும் கொழும்பு விசாரணை பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)



தேசிய சுற்றாடல் தினத்தை முன் னிட்டு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் முன்னெடுக்கப்பட்ட சுற் றாடல் தின நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்ற போது பயன்தரு மரக்கன்றுகள் நடப்பட்டன.

# 110 குடும்பங்களுக்கு சீமெந்து பக்கற்றுக்கள் வழங்கல்



(கொழும்பு)

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் காரைநகர், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 110 குடும்பங்களுக்கு தலா 10 சீமெந்து பைக்கற்றுக்கள் நேற்று முன்தினம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீட்டின் பூச்சு வேலைக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 50 குடும்பங்களுக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 60 குடும்பங்களுக்கும் தலா 10 சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

# தமிழ் சினிமா வரலாறு

177

## சிவாஜியின் இளமைப் பருவம்



கட்டபொம்மன் நாடகத்தில் வெள்ளைக்கார சிப்பாய் வேடத்தில் நடிக்க சிலர் தேவைப் பட்டதால் சிவாஜியை நாடகக் காரர்கள் அழைத்துச் சென்று விட்டார்கள்.

வெள்ளைக்கார சிப்பாய்கள் அணிவகுத்து வரும் காட்சியில் அந்த சிப்பாய்களில் ஒருவராக சிவாஜியும் நடித்து வந்தார்.

நாடகம் முடிந்து வீட்டுக்குச் சென்றதும், சிவாஜிக்கு அவர் அப்பாவிடம் உதை கிடைத்தது! ஏனென்றால் தேசியவாதியான சின்னையா மன்றாயருக்கு வெள்ளைக்காரர்கள் என்றாலே பிடிக்காது. சிவாஜி வெள்ளைக்கார சிப்பாய் வேடம் போட்டதால் அவருக்கு அளவு கடந்த கோபம்! டேய் கூத்தாடி பயலே! உனக்கு என்ன தைரியம் இருந்தால் என் எதிரியின் படையில் சேர்ந்து கூத்தாடுவாய்! என்று கூறிய படி அடித்தார்.

இதனால் சிவாஜிக்கு காய்ச்சல் வந்து விட்டது. படுக்கையில் போய் விழுந்தார். நாமும் நடிகனாக வேண்டும் கட்டபொம்மனாக நடிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் ஆழமாகப் பதிந்தது.

### யதார்த்தம் பொன்னு சாமிப்பிள்ளை

இந்த நேரத்தில் யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளையின் மதுரை ஸ்ரீ பாலகான சபா என்ற நாடகக் கம்பனி திருச்சியில் முகாமிட்டு நாடகங்கள் நடத்தி வந்தது.

(யதார்த்தம் பொன்னு சாமிப்பிள்ளை, என்.எஸ். கிருஷ்ணன் நடித்த பெரும்பாலான படங்களில் அவருடன் நடித்தவர். பிற்காலத்தில் சிவாஜி நடித்த தூக்கு தூக்கியில் வாத்தியாராக நடித்தவர்)

இந்த நாடகக் குழுவில் சேர்ந்து விடவேண்டும் என்று சிவாஜி விரும்பினார். நாடகக் குழுவினர், திருச்சியில் நாடகங்கள் நடத்தி முடித்து விட்டு வெளியூருக்கு செல்ல ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர்.

நாடகக் கம்பனிக்கு சிவாஜி சென்றார். எனக்குப் பாடத் தெரியும், ஆடத் தெரியும், நான் அப்பா - அம்மா இல்லாத அநாதை. நாடகத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

அப்போது சிவாஜி நன்றாகப் பாடும் அளவுக்கு பயிற்சி பெற்றிருந்தார். அவரை ஒரு பாட்டு பாடச் சொன்னார்கள். பழனிவேல் இது தஞ்சம் என்ற பாடலை சிவாஜி பாடினார். நாடகக் கம்பனிக்காரர்களுக்கு பிடித்து விட்டது. உடனே கம்பனியில் சேர்த்துக் கொண்டார்கள்.

### காக்கா ராதா கிருஷ்ணன்

அப்போது, அந்தக் கம்பனியில் காக்கா ராதா கிருஷ்ணனும் நடிகராக இருந்தார். அவர் சிவாஜியின் பக்கத்து வீட்டுக்காரர். சிவாஜியைப் பார்த்த அவருக்கு ஒரே ஆச்சரியம் இங்கே எப்படியடா வந்தாய் கணேசா என்று கேட்டார்.

நான் வீட்டுக்குத் தெரியாமல் இந்தக் கம்பனியில் வந்து சேர்ந்து விட்டேன். வெளியே யாரிடமும் சொல்லி விடாதே என்று சிவாஜி கேட்டுக் கொண்டார்.

நாடகக் கம்பனி திருச்சியில் இருந்து திண்டுக்கலுக்கு சென்று முகாமிட்டது.

அந்த நாடகக் கம்பனியில், புது நடிகர்களுக்கு பயிற்சி அளிக்கும் வாத்தியாராக சின்ன பொன்னுசாமி படையாச்சி என்பவர் இருந்தார். அவர் தான் சிவாஜி கணேசனுக்கு நடிப்பு பயிற்சி அளித்தார்.

சின்ன பொன்னுசாமி தான் என் நாடக குரு என்று சிவாஜி குறிப்பிட்டுள்ளார்.

சிவாஜி நடித்த முதல் நாடகம் ராமாயணம். அதில் அவர் போட்ட வேடம் சீதை யாரென இந்தப் புருஷனை அறிகிலேன் என்ற பாடலைப் பாடி அதற்கு ஏற்ற மாதிரி ஆட்டம் ஆடி நடித்தார்.

(தொடரும்)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து "TNA"யுடன் கலந்துரையாடல் நடத்தும் நடுநிலையாளராக அமெரிக்காவின் ஆர்மிற்ரேஜ்

சண்டே லீடர் பத்திரிகையில் "இலங்கை பிரச்சினையில்... நடுநிலையாளராக ஆர்மிற்ரேஜ்" எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்

இவர்களுள்ளும் அநேகர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டோரேயாகும்.

இந்தப் பெருந் தொகையினரிலும் ஒரு சிறு பகுதியினரது வழக்குகளுக்கான புலன் விசாரணைகள் இப்போது தான் இடம்பெற்று வருகின்றபோதிலும் இதுமட்டில் எவராவது இதுவரை கைது செய்யப்பட்டதுமில்லை.

காணாமற் போன உறவினர்களது குடும்பங்கள் பொதுவாகவே பொலிஸாரும் இராணுவத்தினரும் தொடர்ந்தும் தம்மை எதிரிகளாகக் கருதிப் பார்ப்பதாகவே முறையிடுகிறார்கள். நம்பகத்தகுந்த விசாரணையின் பொருட்டு சேவையிலிருக்கும் பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் இவர்கள் அனைவரையும் ஒரே பாதுகாப்பு கட்டமைப்பாக



பார்க்கையில் இவர்களிடமிருந்து நீதியான உண்மைத் தகவல்களைப் பெறுவதற்கு அரசியல் கலப்பற்ற சுத்தமான, நேர்மையான மற்றும் உறுதியான கடமையுணர்வே எதிர்பார்க்கப்படுகிறது.

காணாமற் போனவர்கள் பற்றிய விடயத்தில் முன்னைய ஆட்சியினரிலும் பார்க்க தற்போதைய அரசு குறிப்பிடத்தக்க அளவில் சர்வதேச ஆலோசனைகளை திறந்த மனத்துடன் கூடுதலாகவே உள்வாங்கி சில பிரச்சினைகளைக் கையாள்வதற்கு வழிகாட்டக் கூடிய உறுதியான கொள்கைகளை உருவாக்குவதற்கும் ஆரம்பித்துள்ளது.

எப்படியும் காணாமற்போன உறவுகளின் குடும்பங்களுக்கும் அவர்களுடன் இணைவாக இயங்கி உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்குமிடையில் அரசல் புரசலாக ஏற்பட்டுவரும் சிறிய விரிசல்களை மெதுவாக வளர்த்துக் கொண்டிருப்பதையிட்டு தனது அதிருப்தியை ICG உறுதியாக வலியுறுத்தியுள்ளது.

"UNHRC" விடய சம்பந்தமாக விடுக்கப்படும் வாய்மூல அறிக்கைகளையும் கூற்றுக்களையும் தவிர இலங்கையின் மூத்த அரசியல் தலைவர்களால் உண்மையில் இராணுவத் தலைவர்களுக்கும் பொலிஸாருக்கும் துஷ்பிரயோகங்கள், அநியாயங்கள் மற்றும் ஏனைய தீமைகள் சார்ந்த விதமான செயற்பாடுகளையும் முடிவுக்கு கொண்டு வருவதுடன் முக்கியமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ ஆலோசனைகளை அவர்கள் வழங்கியதற்கான ஆதாரங்கள் கிடையாதென ICG மேலும் கூறுகிறது.

இடைக்கால நீதி (Transitional Justice) பற்றி இராணுவத்திற்கு வெகு சொற்ப அறிவே இருப் பதுடன் ஸ்தாபன ரீதியான சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறல் மட்டில் அதாவது ஆதரவைப் பெறுவதற்கு மூத்த குடிமக்களால் நீடித்த விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றே இராஜதந்திர மற்றும் "ஐ.நா. மட்ட அதிகார அறிக்கைகள்" காட்டுகின்றன.

தமிழில்
யோகர்

எதிர்நோக்குவது குறைவாய் இருப்பின் ஏமாற்றம் மிகுதியாய் ஏற்படாது.

-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தருவதற்கு அவர்கள் தயாரில்லை நாம் ஒத்துழைத்து என்ன பயன்?

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு நாம் ஒத்துழைப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்போம் என இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது நியாயம்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறுவது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

அதாவது இந்த நாட்டில் அ.அமிர்தலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் சிங்களவர்களே எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்துள்ளனர். அதிலும் குறிப்பாக இந்த நாட்டில் இருக்கக் கூடிய இரு பிரதான அரசியல் கட்சிகளில் ஒரு கட்சி ஆளும் கட்சியாக இருந்தால், மற்றைய அரசியல் கட்சியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார்.

இத்தகைய சூழ்நிலையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான தீர்வு காண்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறியதான பதிவுகள் உள்ளன.

எனினும் அப்படியான ஒத்துழைப்புகள் எதுவும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக ஒத்துழைப்பு வழங்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறிய காலங்களில் விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டம் முனைப்புக்காட்டியிருந்தது.

எனவே, அவ்வாறான ஒத்துழைப்புப் பற்றி கூற வேண்டிய தேவை எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு இருந்ததுடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அரசு–விடுதலைப் புலிகள் என்ற இரு தரப்புக்குமான பேச்சுவார்த்தைகளும் நடந்தன.

ஆனால் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற இச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்போம் என்று கூறுவது அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டால் பொருத்தமானதாக அமையும்.

ஆனால் இலங்கை அரசு இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி யாருடனும் கதைக்கவோ பேசவோ இல்லை. மாறாக அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பற்றிய முனைப்புகள் நடக்கின்றன.

இந்த முயற்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தருமொன்று யாரேனும் நம்பினால் அது மிகப் பெரும் தவறாகும்.

இது ஒருபுறம் இருக்க, தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்குவது என்பதில் இருந்து விலகும் பணியில் நல்லாட்சியும் ஈடுபட்டுள்ளமை தெளிவாகிறது.

இதற்கு சாட்சியம் போர்க்குற்றம் தொடர்பிலான உள்ளக விசாரணையில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை; இறுதிப் போரில் அதிக உயிரிழப்பு ஏற்படவில்லை என்ற அறிவிப்பாகும்.

இந்நிலையில் இரா.சம்பந்தர் ஐயா ஒத்துழைப்பு யாருக்கு வழங்குவது? வழங்குவதால் ஏதேனும் ஆகுமா? இதனால்தான் ஒத்துழைப்பு வழங்குவோம் என்பது பொருத்தமற்ற வார்த்தையாகும்.

### திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான

# எச்சங்களை பரிசோதனைக்கு அமெரிக்கா அனுப்பி வைப்பதற்கு சட்டத்தரணி எதிர்ப்பு

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களின் பரிசோதனைகள் குறித்து அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் உள்ள நிறுவனத்திற்கு அனுப்புவது சிறந்தது என்றும, காணாமற்போனவர்கள் சார்பாகஏற்கெனவே தெரிவு செயயப்பட்ட மூன்று நிறுவனங்களிடம் அனுப்பாது பேரூ நிறுவனத்தினால், அமெரிக்காவில் உள்ள குறித்த நிறுவனம் சிறந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளமையினால் அதன் அடிப்படையில் அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் உள்ள நிறுவனத்திற்கு மனித எச்சங்களை அனுப்புவதற்கான அனுமதியை குற்றப்புலனாய்வுப் பிரிவினரினால் (சி.ஐ.டி) மன்னார் நீதிமன்றத்திடம் நேற்று திங்கட்கிழமை கோரியுள்ளதாக காணாமல் போனவர்களின் குடும்ப உறவுகள் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம்மனித புதைகுழிதோண்டுவது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று திங்கட் கிழமை மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த குற்றப்புலனாய்வுப்பிரிவினர் மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் குறித்து காணாமல் போனவரகளின் குடும்ப உறவுகள் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தில் உள்ள நிறுவனத்திற்கு மனித எச்சங்களை அனுப்புவதற்கான அனுமதியை குற்றப் புலனாய்வுப் பிரிவினரினால் மன்னார் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

எனினும் நாங்கள் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தோம். இவ்விடயம் சம்பந்தமாக அதற்கு நாங்கள் ஏற்கனவே எதிர்ப்பை தெரிவித்திருந்தோம். குறித்த நிறுவனம் ஒரு சிறந்த நிறுவனம் இல்லை.

குறித்த நிறுவனம் எவ்வாறு பரிசோதனைகளை மேற்கொள்கின்றது என்பது குறித்து மன்னார் நீதிமன்றத்தின கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

நாங்கள் நன்கு அறிந்து கொண்ட அறிவு சம்பந்தமான விடயத்தில் ஏற்கெனவே மாத்தறை புதைகுழியின் போதும் இந்த அமெரிக்கா நிறுவனம் அங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் மிருகத்தின் எலும்புக்கூடுகள் என்ற தகவலை தந்த அடிப்படையில் காணாமல் போனவர்கள் சார்பில் இந்த அமெரிக்க பல்கலைக்கழகத்தில் நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் இவ்விடயம் குறித்து நாம் எதிர்ப்பை தெரிவித்தோம்.

காணாமல் போனவர்கள் சார்பாகவும், எங்களினால் முன் வைக்கப்பட்டிருந்த மூன்று நிறுவனங்களிடமும் தொடர்பை ஏற்படுத்தி அவற்றின் அறிக்கையினை அடுத்த தவணைக்கு நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருவோம் என மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி மீண்டும் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அது மட்டுமல்ல; மனித புதைகுழிக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிணறு தொடர்பான வழக்கும் இன்றைய தினம் (நேற்று) விசாரணைக்காக எடுத்துக் கொளளப்பட்டது.

இதன் போது ஏற்கெனவே சட்ட வைத்திய நிபுணர் வைத்தியர் வைத்தியரட்ன, மனித புதைகுழி அகழ்வது தொடர்பான ஒரு ஒழுங்கு விதிகள் தயாரிக் கப்படுவதாகவும், குறித்த ஒழுங்கு விதிகள் சுகாதார அமைச்சிடம் இருந்து நிதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டு அனுமதி பெற்ற பின் நீதிமன்றத்தின் அனுமதி யோடு கிணற்றின் அகழ்வு பணியை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் குறித்த நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையாத நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் அனுமதி கோரப்பட்டது. அதற்கமைவாக குறித்த வழக்கு விசாரணைகள் மீண்டும எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என காணாமல் போனவர்களின் குடும்ப உறவுகள் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் மேலும் தெரிவித்தார். (2-4)

# வாழ்வாதார உதவி வழங்கும் செயற்றிட்டம் இவ்வருடமும் ஆரம்பம்

## வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் யுத்தத்திலதமது பிள்ளைகளை இழந்த குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரனின் திட்டத்திற்கு அமைவாக கடந்த ஆண்டு தனது அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டில் வடக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 43 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கி மேற்குறித்த வகையிலே பயனாளிகள் பதிவு செய்யப்பட்ட வேளையிலே வடக்கு மாகாணம் முழுவதும் மொத்தமாக 12 ஆயிரத்து 494 குடும்பங்கள் பதிவு செய்திருந்த போது, விசேட தேவைகள் உடையவர்கள் எனும் அடிப்படையில் 5 மாவட்டங்களிலும் தெரிவுகள் பெற்றன.

இதில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் வாழ்வாதார உதவித் திட்டத்தை 860 குடும்பங்களுக்கு ஒவ் வொரு மாவட்டத்திலும் தலா 147 குடும்பங்கள் வீதமும், சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் 125 குடும்பங்களுக்கும் இத்திட்டம்வழங்கப்பட்டது.

அந்த வகையிலே மீதமாகவுள்ள பதிவு செய்த குடும்பங்களுக்கும், கடந்த ஆண்டு பதிவு செய்யத் தவறிய நிலையில் இந்த ஆண்டு பதிவுகளைச் செய்த குடும்பங்களுடன் ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து இறந்த அங்கத்தவர்களின் குடும்பங்களின் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் 25 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 குடும்பங்களைத் தெரிவு செய்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, பயனாளிகளின் வாழ்வாதாரத் தேவைகள் தொடர்பான அவர்களது தெரிவிற்கான விசேட கூட்டம் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, குறிப்பிட்ட நிபந்தனைக ளுக்கடிப்படையில் விசேட தெரிவின்மூலம்தெரிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 100 பய னாளிகளுக்கான தேவை மதிப்பீடு தொடர்பான முதலாவது ஒன்றுகூடல் நேற்று முற்பகல் 10.30 மணியளவில கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இவ் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான திட்டங்கள் தொடர்பில் பயனாளிகளிடம் இருந்து அவர்களது தேவைகள் தொடர்பிலான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவர்களுக்கான உதவித்திட்டம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

அத்தோடு இதேபோன்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான தேவை மதிப்பீடு செய்யும் கலந்துரையாடல்கள் மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் திட்டமிடப்பட்டுள்ளதற்கமைவாக மன்னார் மாவட்டத்திற்கான கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை மன்னாரில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்திலும், யாழ் மாவட்டத்துக்கான கூட்டம் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சரது அலுவலகத்திலும், வவுனியா மாவட்டத்துக்கான கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வவுனியா உள்ளக சுற்றுவட்ட வீதியில் உள்ள கிராம அபிவிருத்தி சஙக கட்டடத்திலும், கிளிநொச்சி மாவட்டத்துக்கான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக பயிற்சி நிலையத்திலும் நடைபெறவுள்ளதாக அறிவக்கப்பட்டுள்ளது. (2-312-281)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** சங்கத்தானை, டச்சு றோட் ஆகிய இடங் களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், குருமன்காடு கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** சூரிய கட்டைக்காடு பிரதேசம், மணல்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## கருத்தரங்கு

(இருபாலை)

கோப்பாய் கோட்டத்திற்குட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (இ-5-136)

# வடமாகாண வல்லவன் உதைபந்தாட்டத்தொடர்
# அண்ணா சிலையடியை வென்றது இளந்தென்றல்







உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட சமரில் 28.05.2016 அன்று நடைபெற்ற போட்டியில் அண்ணா சிலையடி வி.க. எதிர்த்து முல்லைத்தீவு அளம்பில் இளந்தென்றல் வி.க. மோதியது.

முதற்பாதி ஆட்டத்தில் 19 ஆவது மற்றும் 26 ஆவது நிமிடங்களில் வினோத் மற்றும் திலெக்சன் ஆகியோர் கோலினை அடிக்க பதிலுக்கு அண்ணா சிலையடி வி.க. இரண்டாவது பாதி ஆட்டதில் 38 ஆவதும் 58 ஆவது நிமிடத்திலும் செந்தூரன் மற்றும்சாருஜன் ஆகியோர் கோலினை அடித்து விறுவிறுப்பாக்கினர். ஆட்டத்தினை சமன் செய்வதற்காக அண்ணாசிலையடி வி.க. ஆட்டத்தினை வேகப்படுத்திய போதும் கோல் பெற முடியாது போனதால் அளம்பில் இளந்தென்றல் வி.க. 3:2 என வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.இளந்தென்றல் விளையாட்டுக்கழக வினோத் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை வடமா காண வல்லவனின் ஆதரவாளர் தி. ஞானவேல் வழங்கி கௌரவித்தார். (க)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம்
# குருநகர் பாடுமீன் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

29.5.2016 நடைபெற்ற இரண்டாவது போட்டியில் மன்னார், சாவக்காடு கில்லறி அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணி மோதியது.

இரண்டு அணிகளும் பதினொரு பேர் கொண்ட போட்டிகளில் சிறப்பான பந்துப்பரிமாற்றத்தை (ball passing) கொண்டு ஆடக்கூடியவை. இதனால் போட்டியும் அதிக பார்வையாளர்களை ஈர்த்திருந்தது.

போட்டியின் 16 ஆவது நிமிடத்தில் கில்லறி வீரர் நிரஞ்சன் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்ப ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

எனினும் 26 நிமிடத்தில் பாடுமீன் வீரர் மயூரன் அசத்தலாக கோலொன்றைப் போட்டு அணிக்குப் பலம் சேர்த்தார்.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோலடிக்க கடுமையாக முயற்சி செய்தும் அது முடியாது போக பாடுமீன் அணி 1:0 எனும் அடிப்படையில் வெற்றி பெற்று D பிரிவில் மூன்று புள்ளிகளுடன் முன்னிலை பெற்றது.

ஆட்டநாயகனாக பாடுமீன் விளையாட்டுக்கழக வீரர் மயூரன் தெரிவானார். (க)

## ஹொக்கி சங்கத்தின் உப தலைவராக தர்மகுமாரன் தெரிவு



அகில இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் உப தலைவராக உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு முதல்வர் பழனித்துரை தர்மகுமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தின் செயலாளரும் ஆவார்.

அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டி சென்.பீற்றர் கல்லூரியில் நடைபெற்ற 2016 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவிலேயே ப.தர்மகுமாரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## பற்றீசியனை வீழ்த்தியது சென்றலைட்ஸ்





யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தி வரும் பிரிவு 3 இற்கான 50 ஓவர்களை கொண்ட லீக் போட்டியில் பற்றீசியனை வீழ்த்தியது சென்றலைட்ஸ்.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதன்படி துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் 47.1 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 293 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக அணித்தலைவர் செல்ரன் 55, ஜேம்ஸ் 60, யூலியஸ் 50, ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றீசியன் சார்பாக நோபர்ட் 3, மிலான்டோ 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 40.3 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களை பெற்றது. ரியூடர் 30, நோபர்ட் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருபா 3, ஜேம்ஸ் 2 இலக்குகளை கைப்பற்றினர். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஒற்றுமை வி.க. கிரிக்கெட் அண்ணா சிலையடி வெற்றி

தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த வியாழக்கிழமை அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற போட்டியில் வல்வை அணி 3 விக்கெட்டுக்களால் தோல்வி அடைந்துள்ளது.

6 ஓவர்கள் போட்டியில், வல்வை அணி 6 விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற, அண்ணா சிலையடி அணி 5.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 69 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

வல்வை அணி சார்பில் பிரகலாதன் அதிகபட்சம் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (க)

## ரகீம் அனல் வேகப்பந்து வீச்சு கலைஒளியை வென்றது அளவெட்டி மத்தி

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது.

அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை கலைஒளி விளையாட்டு கழகத்தை எதிர்த்து அளவெட்டி மத்தி வி.க. மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அளவெட்டி மத்தி வி.க. முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கலைஒளி அணி ரகீம் அனல் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 26 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகூடிய ஓட்டமாக அனு 12 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் ரகீம் 5 இலக்குகளை வீழ்த்தினார். 27 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அளவெட்டி மத்தி சுயாந்தனின் நிதானமான நேர்த்தியான துடுப்பாட்டத்தின் மூலம் 3 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. அளவெட்டி மத்தி வி.க. வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. (கு)



# சாலவ முகாமை சுற்றியுள்ள...



கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட பாரிய வெடி விபத்தால் அந்தப் பிரதேசம் எங்கும் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று காலையிலும் இரண்டு குண்டுகள் வெடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதக்கிடங்கில் இருந்து வெடித்துக் கிளம்பிய ஆட்டிலறி மற்றும் பல்குழல் பீரங்கிக் குண்டுகள் சுற்றுப் புறத்தில் உள்ள பகுதிகள் எங்கும் விழுந்து வெடித்து வீடுகள் மற்றும் வாகனங்களுக்குப் பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆயுதக்கிடங்கில் பற்றிய தீ அணைக்கப்பட்டு விட்டதாக அறிவித்திருந்த இராணுவத் தரப்பு இந்த படைமுகாமைச் சுற்றியுள்ள ஒரு கிலோ மீற்றர் சுற்றளவுடைய பிரதேசத்துக்குள் எவரும் நுழைவதற்கு தடைவிதித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் ஏராளமான குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளதுடன், பல குண்டுகள் வெடிக்காமல் இருப்பதாலும் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முகாமை அண்மித்த பிரதேசத்தை பாதுகாப்பான பிரதேசம் என தற்போதைக்கு உறுதிப்படுத்தி கூற முடியாது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்தார்.

தீ முழுமையாக அணைக்கப்பட்ட போதும ஆயுத களஞ்சியத்திலிருந்து தொடர்ந்து வெடிப்பு சத்தங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன. இராணுவ முகாமை சுற்றி காணப்படும் பிரதேசத்தில் விழுந்து கிடக்கின்ற ஆயுதங்களையும் ஆயுதங்களின் பாகங்களையும் அகற்றி துப்புரவு செய்வதற்கு 96 மணிநேரம் இராணுவத்தினரால் கோரப்பட்டுள்ளது.

அந்தவகையில் 96 மணி நேரத்தின் பின்னரே இராணுவ முகாமை சுற்றியுள்ள பிரதேசங்களை பாதுகாப்பான பிரதேசமாக அறிவிக்க முடியும். வீடுகளுக்குள்ளும் வெளியிலும் ஆயுத களஞ்சியத்திலிருந்து சிதறிய ஆயுதங்களின் துண்டுகளும் பாகங்களும் வந்து விழுந்துள்ளன. சில ஆயுதங்கள் முழுமையாக விழுந்து காணப்படுகின்றன. எனவே 96 மணித்தியாலத்திற்கு பின்னரே குறித்த பிரதேசத்தில் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை உறுதிப்படுத்தி கூறமுடியும்என்றார்.

கொஸ்கம, சலாவ இராணுவ முகாமின் ஆயுத களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்தால் அந்தப் பிரதேசம் முழுவதும் அழிந்து போயு ள்ளது. முகாமை அண்மித்த பிரதேசத்தை பாதுகாப்பான பிரதேசம் என தற்போதைக்கு உறுதிப்படுத்தி கூற முடியாது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி வெடி விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில் மேலதிக தகவல்கள் எவையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. (செ-11)

(மற்றும் ஒரு செய்தி உள்ளே...)

# கைதிகளிடையே...

இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அதிகரித்து மோதலில் முடிந்துள்ளது. குறித்த கைகலப்பில் கைதி ஒருவரின் தலையில் பாரிய காயம் ஏற்பட்டுள்ளது. மற்றைய கைதிகள் சிறு சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்தவர்களுக்கு வைத்தியர்கள் ஊடாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் தரப்பு தகவல்கள் குறிப்பிடுகின்றன. (செ-9)

# குற்றச்செயல்...

சட்டம் ஒழுங்குதுறை அமைச்சர் சாகல ரத்நாயக்கவுடன் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் உரையாடிய போதே அவர் இத்தகவலை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் கூறுகையில்,

யாழ்குடாவை சேர்ந்த சமூக முன்னோடிகள் என்னை சந்தித்து விடுத்த வேண்டுகோளின் பேரில் நான் இன்று யாழ்ப்பாணத்தில் நிலவுவதாக கூறப்படும் சட்டம் ஒழுங்கு சீரற்ற நிலைமையையும், அவை திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறலாம் என்ற அவர்களின் சந்தேகத்தையும் எனது கணக்கில் எடுத்துள்ளேன்.

இது தொடர்பில் சட்டம் ஒழுங்கு துறைக்கு பொறுப்பான அமைச்சர் சாகல ரத்னாயக்கவிடம் அமைச்சரவை சந்திப்பின் போது கலந்துரையாடி உள்ளேன்.

அதேவேளை சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் விஜேவீர, பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருடனும் உரையாடியுள்ளேன்.

இந்நிலையில் தற்போது உலக பொலிஸ் மாநாட்டுக்கு சென்றுள்ள பொலிஸ்மா அதிபர் இவ்வார இறுதியில் நாடு திரும்பியதும், அவர் யாழ்ப்பாணம் சென்று மூன்று தினங்கள் அங்கு தங்கி இருந்து அங்கு நிலவும் சட்டம் ஒழுங்கு நிலைமை கண்காணிப்பு நடவடிக்கைகளை நேரடியாக வழி நடத்துவார்.

இதன்மூலம் யாழ்ப்பாணத்து பொலிஸ் இயந்திரம பழுது பார்க்கப்பட வேண்டும் என அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் நான் கூறியுள்ளேன்.

சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் விஜேவீரவும், பொலிஸ்மா அதிபருடன் வடக்குக்கு செல்லவேண்டும் என்ற என் யோசனையும் நடைமுறையாகும்.

வடக்கே சென்று அங்கு மக்கள் பிரதிநிதிகளையும், சமூக தலைவர்களையும், வடக்குக்கு பொறுப்பான முழு பொலிஸ் அதிகாரிகளுடன் ஒருசேர சந்தித்து இன்று அங்கு தலைவிரித்தாடும், கொலை, கொள்ளைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க என்னிடம் உறுதியளித்துள்ளார் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஆயுதக் கிடங்கை...

அகற்றுவதற்கான ஆயத்தங்களை தான் மேற்கொண்டிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். குறித்த இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தின் காரணத்தை கண்டுபிடித்து அதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமெனவும் அது அரசாங்கத்தின் கடமையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## அரசாங்கத்தின் செலவில்

# சேதமடைந்த மக்களின் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் - ரணில்

(கொழும்பு)

கொஸ்கம, சாலவ இராணுவ முகாமில் பரவிய தீ மற்றும் ஆயுத கிடங்கு வெடித்ததனால் சேதடைந்த பொதுமக்களின் வீடுகள் அரச செலவில் புனரமைத்து கொடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

திடீர் அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசத்துக்கு நேற்று கண்கணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பிரதமர், முற்றாக சேதடைந்த வீடுகளை மீண்டும் கட்டிக்கொள்ள அரசாங்கம் பணம் வழங்கும் எனவும் கூறியுள்ளார்.

சேதமடைந்த பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைமைக்கு கொண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பின்னர், அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆயுத கிடங்கு வெடித்து சிதறியதால், 9 கிராம சேவகர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த கிராம சேவகர் பிரிவுகளில் சிலவற்றுக்குள் செல்லும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினரின் அனுமதி கிடைத்த பின்னர் ஏனைய பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கும் அங்கு செல்ல முடியும் எனவும முகாமில் இருந்த இரண்டு பாடசாலைகளை தவிர ஏனைய பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இன்றைய தினம் திறக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஊடக சுதந்திரம் இல்லாவிடின் ஜனநாயகம் முழுமை பெறாது

## தகவல் திணைக்கள பணிப்பாளர் கருத்து

(கொழும்பு)

ஊடக சுதந்திரம் இல்லாத இடத்தில் ஜனநாயகம் முழுமை பெறாது எனவும் சிறந்த நாடு, சிறந்த ஊடகத்தை உருவாக்க பொறுப்புடன் உச்ச பலத்துடன் செயற்படப் போவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக பதவியேற்றுக் கொண்ட கலாநிதி ரங்க கலன்சூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் பணிப்பாளர் பதவிக்கான பணிகளை நேற்று புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அவர் இதனை கூறியுள்ளார்.

ரங்க கலன்சூரிய, டென்மார்க்கை தலையிடமாக கொண்ட ஆசிய பசுபிக் சர்வதேச ஊடகப் பயிற்சி நிறுவனத்தின் பிராந்திய ஆலோசகராவார்.

மலேசியா, பாகிஸ்தான் உட்பட ஆசிய பசுபிக் நாடுகளை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி கொடுக்கும் ஆலோசகராகவும் கலன்சூரிய பணியாற்றி வருகிறார்.

மேலும் கருத்து வெளியிட்ட அவர், தற்போது ஏற்பட்டு வரும் ஜனநாயக ரீதியான மாற்றம் முழுமையடைய வேண்டுமாயின் ஊடக மறுசீரமைப்பும் அவசியம் எனக் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில், ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவித்தானவும் கலந்துகொண்டார். (செ-11)

# இராணுவ முகாமைக்கூட பாதுகாக்க முடிவில்லை

## நல்லாட்சி அரசு மீது நாமல் சாடல்

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்ற யுத்த காலத்தில் கூட நாம் பாதுகாத்த இராணுவ முகாமை இன்றைய அரசாங்கத்தால் பாதுகாக்க முடியாத நிலைமையே காணப்படுவதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யோஷித ராஜபக்ஷ தமக்கு அனுப்பிய பணம் சம்பந்தமான மின்னஞ்சல் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக நேற்று பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் நாமல் கருத்து தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்கவின் தேவைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவொன்றை அமைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரை பழிவாங்குகின்றனர்.

எமது குடும்பத்தை பழிவாங்குவதை விட்டுவிட்டு அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு நல்லாட்சி அரசாங்கத்திடம் கோருகின்றேன். யுத்தகாலத்தில் கூட பாதுகாப்பாக பேணப்பட்ட இராணு முகாமை சமாதான காலத்தில் இன்றை அரசாங்கத்தால் பாதுகாக்க முடியவில்லை.

மேலும் பொய்களைக் கூறிக் கொண்டு அரசாங்கத்தை முன்னேற்றகரமாக இனியும கொண்டு செல்ல முடியாது எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# பலாக்காய் விநாயகர்



கொட்டகலை பகுதியில் உள்ள பி.ஜெகநாதன் என்பவரின் வீட்டில் உள்ள பலாமரத்தில் பிள்ளையார் உருவத்தில் பலாக்காய் ஒன்று காய்த்துள்ளது.

இந்த செய்தி அப்பிரதேசத்தில் தீவிரமாகப்பரவிக் கொண்டிருக்கிறது. இந்த அதிசயத்தை பார்வையிடுவதற்கு பொதுமக்கள குறித்த வீட்டிற்கு படையெடுத்து வருவதோடு வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (செ-11)

# 3 சந்தேக நபர்களுக்கு...

பல்வேறு சமூகவிரோத மற்றும் வாள்வெட்டு சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டு வந்திருந்தனர். இந்நிலையில் இவர்களில் தேவா என்பவர மீது சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வாள்வெட்டு தொடர்பான மூன்று குற்றச்சாட்டுக்கள் பதிவு செயயப்பட்டுள்ளது. அத்துடன் வேறு பொலிஸ்நிலையங்களிலும் இவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த நபர் உட்பட மூன்று பேரையும் கைது செய்வதற்காக விசாரணைகளையும் ஏற்பாடுகளையும் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் மேற்கொண்டிருந்தன.

இவற்றில் இவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ள சுன்னாகம், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பொலிஸ் நிலையங்களால் இவர்கள் தீவிரமாக தேடப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இணுவில் பகுதியில்வைத்து வாள்வெட்டு நடவடிக்கை ஒன்றுக்கு தயாராக இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இருந்த போதிலும் அவர்கள் தப்பிச்செல்ல முற்பட்ட போது தேவா என்பவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கைது செய்ய முயற்சித்திருந்த போதும் குறித்த பிரதான சந்தேக நபரான தேவா என்பவர் அங்கிருந்து தப்பிச்சென்றிருந்தார்.

எனினும் இவ் விடயம் தொடர்பாக தாம் துப்பாக்கி பிரயோகம் எதனையும் மேற்கொள்ளவில்லையென சுன்னாகம் பொலிஸார் மறுத்திருந்தனர்.

பின்னர் ஓர் ரொக்டீம் எனும் வாள்வெட்டு கும்பலொன்றை பொலிஸார் கைது செய்திருந்தனர். அத்துடன் அதன் பின்னர் தேவா மற்றும் ஏனைய இருவர்களுடனும் தொடரபுடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் பலரை சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளி இடங்களில் தஞ்சம் புகுந்துள்ள மேற்குறித்த மூன்று பிரதான சந்தேகநபர்கள் தொடர்பாக தகவலறிந்தவர்கள் உடனடியாக சுன்னாகம் பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த கோரியுள்ளார்.

இதன்படி தகவலறிந்தவர்கள் 0718591331 என்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்தவின் தொலைபேசிக்கு அல்லது 0724 339000 என்ற சுன்னாகம் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிறியஷாந்தவின் தொலைபேசிக்கு அல்லது 077899 8901 என்ற பொலிஸ் கொஸ்தாபல் சுதாகரனின் தொலைபேசிக்கு அல்லது 0772336249 என்ற பொலிஸ கொஸ்தாபல் தயாளன் என்பவரது தொலைபேசிக்கோ தொடர்பு கொண்டு தகவலை தெரிவிக்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

# கைதான பசில்...

விடுதலை செய்ய பூகோடா நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ காணி மோசடி தொடர்பான குற்றச்சாட்டில் மீண்டும் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்படடிருந்தார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் காணி மோசடி தொடர்பான விசாரணைக்காக அவர் நேற்றுக் காலை நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த விசாரணைக்காக நிதி மோசடி விசாரணை பிரிவு பணியகத்தில் சமுகமளித்த அவர், விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கைது செய்யப்பட்டு, இரண்டு மாதங்களின் பின்னர் கடுவலை நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, கம்பஹா பிரதேசத்தில் தனது மனைவியின் பெயரில் காணப்படும் காணி தொடரபல், கடந்த மே மாதம் 12ஆம் திகதி கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்ஷ, அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று மூன்றாவது தடவையாக மீண்டும் கைது செய்யப்பட்டு பூகொட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவருக்கு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (செ-11)

# மைத்திரி - ரணில்...

முன்தினமிரவு அவசர ஆலோசனை நடத்தியுள்ளனர்.

சாலாவ படைமுகாமின் ஆயுதக் கிடங்கு ஒன்றில் நேற்று முன்தினம் மாலை 5.47 மணியளவில் வெடிவிபத்து ஏற்பட்டதை அடுத்து, குறித்த ஆயுதக் கிடங்கு தீப்பற்றிய எரியத் தொடங்கியது.

இந்த ஆயுதக் கிடங்கில் இருந்த வெடிபொருட்கள் வெடித்துச் சிதறியதால், அருகில் இருந்த மற்றொரு ஆயுதக் கிடங்கிலும் வெடிவிபத்து ஏற்பட்டது.

இங்கு கனரக ஆயுதங்களுக்கான வெடிபொருள்களே அதிகளவில் சேமிக்கப்பட்டிருந்ததால், பாதிப்பும் இழப்புகளும் அதிகமாக ஏறபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினமிரவு ஆலோசனை நடத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தப் பாரிய வெடிவிபத்து சம்பவம் குறித்து ஆராய்வதற்காக தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தை நேற்று அவசரமாக கூட்டியுள்ளனர். (செ-11)

# வட - கிழ. மாற்றுத்திறனாளிகளுக்...

பின்னர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்குறித்த கோரிக்கையைவிடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

போரினாலும் விபத்துகளினாலும் அங்கங்களை இழந்த நாங்கள் இன்று எமது வாழ்வின் துன்பங்களைமறந்து செயலாற்ற முனைகிறோம். தமிழ் மாற்றுதிறனாளிகளின் அமைப்பினால் மாற்றுதிறனாளிகளுக்கான விளையாட்டு போட்டி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்திற்கான போட்டிகள் வவுனியாமாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திற்கான போட்டிகள் மட்டக்களப்பிலும் எதிர்வரும் ஆகஸ்ட், செப்ரம்பர் மாதங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யபட்டுள்ளது. தமிழ் மாற்று திறனாளிகளின் திறமைகளை ஒருங்கிணைக்கும் முகமாக தமிழ் மாற்றுதிறனாளிகள் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியர்கள், விளையாட்டு தலைவர்கள் மற்றும் நடத்துனர்களின் வழிகாட்டலில் போட்டிகள் தெரிவு செய்யப்பட்டு அவ்வாறான போட்டிகளுக்கு முறையான பயிற்சியும் வழங்கப்படும். இந்தபோட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் வீரர்களை தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வழிவகைகள் செய்யும் நோக்குடன் இந்த முயற்சியைமேற்கொண்டுள்ளோம்.

வடக்குகிழக்கில்உள்ள அனைத்து மாற்றுதிறனாளிகளும் இப்போட்டியல் இணைக்கப்படுவார்கள். ஆனால இந்த முயற்சியின் முக்கிய சவாலாக நிதி பற்றாக்குறையை நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே எமது முயற்சிக்கு ஊக்கமளிக்கவிரும்புவர்கள் அனைவரும் உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் இந்த முயற்சியின் மூலம் கிடைக்கும் மேலதிகநிதியை மாற்றுதிறனாளிகளின் பல்வேறுபட்டசெயற்திட்டங்களுக்கு பயன்படுத்தவுள்ளோம். இது தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு 0777 89751 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் www.tamilpanasports.com என்ற இணையதளத்தினூடாகவும் விபரங்களைபெற்றுக் கொளள முடியும் எனவும் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முள்ளம் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பின் செயலாளர் இருதயராஜா, பொருளாளர் அரவிந்தன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மாற்றுதிறன் அற்றோர் அமைப்பின் தலைவர் பரமநாதன், உப தலைவர் அமலன் ஆகியோர் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தனர். (செ-7)

# அவசரமாக...

செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, குறித்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருகத்து இடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே, தேசிய பாதுகாப்புச் சபை நேற்று அவசரமாகக் கூடியது.

இதன்போது சாலாவ படைமுகாம் ஆயுதக் கிடங்கில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பாரிய வெடிப்புச் சம்பவம் தொடர்பான நிலைமைகள் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் பின்னர் ஊடகங்களுக்கு அறியத் தரப்படும் என படைத்துறைச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார்.

இதனிடையில், இந்த வெடிவிபத்துக்கான காரணம் குறித்தோ, வ்பத்தில் ஏற்பட்ட சேதங்களை மதிபிடவோ கால அவகாசம் தேவை என படைத் தரப்பின் குரல்தரவல்ல அதிகாரி பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

சாலாவ படைமுகாமின் ஆயுதக் கடங்கில் நேற்று முன்தினம் மாலை 5.47 மணியளவில் ஏற்பட்ட வெடிவிபத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ நேற்றிரவு பல மணி நேரமாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# யாழில் இன்று...

இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் யாழ் பிரதான பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இன்று இடம்பெறவுள்ள இவ் போராட்டம் தொடர்பாக ஏற்பாட்டு குழு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களது பல பிரச்சனைகள் தொடர்பாக இன்றுவரை அரசாங்கம் தீர்க்கமான ஓர் முடிவை அல்லது தீர்வை பெற்று தரவில்லை.

குறிப்பாக கடந்த 2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மனித வுரிமை செயற்பாட்டாளராக இருந்த லலித் மற்றும் குகன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் காணமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் தெளிவான பொறுப்புகூறலை வழங்கவில்லை.

இதேபோன்று கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்படவில்லை.

மேலும் யுத்த காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் காணாமல் போனோர் தொடர்பாக எதுவிதமான நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

குறிப்பாக இது தொடர்பில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் அதனாலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் மேற்குறித்த பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் உறுதியானதும் தெளிவானதுமான தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்பதை வலியுறுத்தியே இவ் கவனயீர்ப்பு மற்றும் கையெழுத்து போராட்டத்தை நடத்துவதாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் போராட்டத் திற்கு சகல மக்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (செ-4)

# பிரிட்டன்...

தானிய சர்வதேச அபிவிருத்திக்கான திணைகளத்தின் நிரந்தர வதிவிட துணைச் செயலாளர் மார்க் லோகொக் ஆகியோரே இவ்வாறு இலங்கைக்கு வந்துள்ளனர்.

இப்பயணத்தின்போது இவர்கள் பிரதமர் ரணில விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

இதன்போது, நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் முயற்சிகள் மற்றும் இவ்விரு நாடுகள் தொடர்பான பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (செ-11)

# அலாவுதீன் குத்திக் கொலை...

அவரது மனைவியான கலந்தர் ரூபியா அதே வீட்டில் இருந்தமையை சுட்டிக்காட்டிய நீதிபதி மா.இளஞ்செழியன், தூக்கில் தொங்கியதால் மரணம் சம்பவிக்கவில்லை என சட்ட வைதிய அதிகாரி நீதிமன்றத்தில் விசேடமாக சுட்டிக்காட்டியதையும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் குறிக்கப்பட்ட வழக்கின் முக்கிய சாட்சியான வைத்திய கலாநிதியின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் இந்த மரணம் கத்திக் குத்தால் ஏற்படுத்தப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கத்திக் குத்தால் இந்த மரணம் ஏற்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டிய யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி, இறந்தவரின் மனைவியான கலந்தர் ரூபியா கொலை செய்ததை நியாயமான அளவு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமானதை அடுத்து முதலாவது எதிரிக்கு நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். (செ-11)

விற்பனைக்கு
உணவகத்திற்குரிய
தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :-
077 1176 689
(4874)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி
(பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
SCHOLARSHIPS AVAILABLE
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798 (C-4823)
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை
காலி நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடமைபுரிய
★ அலுவலக உத்தியோகத்தர்கள்
★ ஊழியர்கள் தேவை
ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம்
அடங்கிய தமது விண்ணப்பத்தை
NO.3, Kelan kaduwa Place, Colombo 06
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: தங்குமிட வசதி வழங்கப்படும்.
(C-4818)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.